மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

4	1 - 12 - 55	இதழ் 15

மனிதனின் மன அமைப்பை துருவி ஆராய்ந்து புதிய கொள்கைகளை வெளியிட்ட உளக்கூறுபாட்டறிஞர்

சைமன் பெரூட்

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

"மன்றம்" பொங்கல் மலர்

தோழர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் இவ்வாண்டு முதன் முறையாக பொங்கல் நன்னாளை யொட்டி, 'மன்றம்' தனி மலராக சிறந்த முறையில் கொண்டுவர ஆவன செய்துவருகின்றோம்.

கதை, கவிதை, கவிதைக்கதை, ஓரங்க நாடகம், இலக்கியக்காட்சி, வாழ்க்கை வரலாறு—இவைகளை உள்ளடக்கிய பல சீர்திருத்த எழுத்தாளர்களின் கருத்தோவியங்களும் இடம்பெறுகின்றன.

தற்பொழுது 'மன்றம்' வரும் அளவில் நூறு பக்கங்களுக்கு மேல்கொண்டதாக, மூவண்ண அட்டையுடன் ஒரு ரூபாய் விலையில் மலர் மலரும்.

மலரை எதிர்நோக்கும் தோழர்கள் தங்கள் பெயர்களை விற்பனையாளரிடம் பதிவுசெய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சந்தாதாரர்கள் தனியாக மலருக்கென ரூபாய் ஒன்று அனுப்பிவைக்கும்படி வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

நிர்வாகி

"மன்றம்"

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

1 - 12 - 55 வியாழக்கிழமை

மாணவர் முன்னணி

இருளில், இடர்மிகுந்த பாதையில் செல்பவன் காலைக் கதிர்கண்டு மகிழ்கிறான்!

வயலில் அசைந்திடும் இளம்பயிர்கண்டு, உழவனின் உள்ளம் மகிழ்ச்சியில் ஆடுகிறது!

செங்கதிர்ச் செல்வனின் இளங்கதிர்கள் இருளை நீக்குகிறது, மருளை அகற்றுகிறது, பொன்னொளி வீசுகிறது, காண்போரின் முகத்தில் புன்னகை தூவுகிறது!

வரண்டுகிடந்த வயலில் முளைத்தெழும் பசுமை பயிர். வாடிக்கிடந்த உழவனுக்கு ஊக்கமளிக்கிறது! பட்ட பாட்டை அவன் மறக்கிறான், பசும் பயிர் கண்டு அவன் பூரிப்படைகிறான்! அந்த வயல்—அதில் வளரும் பயிர் அவனுடைய வாழ்க்கையில் முதலாக—நம்பிக்கையாக—அடிப்படையாக ஆகிறது!

செங்கதிர்ச் செல்வன் கண்டு மக்கள் களிப்படைவதுபோல, பசும்பயிர் கண்டு உழவன் பாடிடுவதுபோல, திராவிட இளைஞரின் எழுச்சிகண்டு—திராவிட மாணவரின் கூட்டங் கண்டு மகிழ்கிறோம், வாழ்த்துகிறோம்!

மாணவர்கள், அவர்களே இருளில், இடரில் ஆழ்ந்துள்ள நாட்டில் புன்னகையை ஆக்க வல்ல சக்திபடைத்த இளம் கதிர்கள்! ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதிர்ச்செல்வர்கள்! நாட்டில் சூழ்ந்துள்ள அறியாமையிருளை நீக்கிட, மக்களின் மனதில் ஆழ்ந்துள்ள மருளை அகற்றிட அவர்களால் முடியும்!

ஒரு நாட்டின் எதிர்காலம் ஒரு இனத்தின் வருங்காலம் அதன் இளைஞரிடத்தில்—குறிப்பாக அதன் மாணவர்களிடத்தில் இருக்கிறது!

ஒரு நாட்டின் வரலாறு போர்க்களங்களிலோ, பாசறைகளிலோ, அரசியல் மண்டபங்களிலோ, மந்திரிசபைகளிலோ எழுதப்படவில்லை; அது எழுதப்படுவது பள்ளியில், கல்லூரியில், ஆய்வுச்சாலையில், அறிவியற் கூடங்களில்!

ஒரு நாட்டின் செல்வம் அதன் மாணவ மணிகளாகும்!

திறம்படைத்த மாணவர்களைச் சேர்த்துப் பார்ப்பது, நாட்டின் எதிர்கால ஓவியத்தை எழுதிப் பார்ப்பதாகும்!

இன்பத் திராவிடத்தின் எழில் ஓவியத்தை நாமும் காண்கிறோம், இளம் திராவிட மாணவர்களைக் காணும்பொழுது, திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாட்டில் அவர்களைக் கண்ட பொழுது! திராவிட மாணவர்க் கழகங்கள் தந்த பயிற்சி, திராவிடரியக்கங்களுக்கு நல்ல பலனைத் தந்துள்ளது; பார்க்கப்போனால், திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சிக்கு நல்லதொரு பாசறையாக அது இருந்துவந்திருக்கிறது!

அந்தப் பாசறைக்குச் சிறந்த தலைவராக—சீலம்மிக்க காவலராக தோழர் மதியழகன் அவர்கள் இருந்தார். போராட்டமும், புயலும், கல்லும், கத்தியும் மாணவர்களைத் தாக்கிய நேரங்களிலும், அதிகாரிகளின் ஏவுதலும் ஆட்சியாளர்களின் எச்சரிக்கைகளும் சட்டமன்றங்களின் அழைப்பும் மாணவரியக்கத்தை அழித்துவிட முயன்ற நேரங்களிலும் தோழர் மதியழகன் இயக்கம் சிதறிவிடாதபடி கட்டிக் காத்துவந்திருக்கிறார். அவர் பொறுமையால் மாணவரியக்கம் உறுதியானதொரு இடத்தைப் பெற்றுள்ளது! அவர் விட்டுச்செல்லும் பணியை—அவர் வேறெங்கும் சென்றுவிடவில்லை, இப்பொழுதுள்ளதைவிட பெறும் பொறுப்பை ஏற்றுச் செல்ல அறிஞர் அண்ணாவால் அழைக்கப்பட்டிருக்கிறார்—அவர் ஆற்றிய பணியைத் தொடர்ந்து நடத்த மற்றும் பல மாணவத் தோழர்கள் முன்வந்துள்ளனர்—இல்லை மாணவருலகால் முன் நிறுத்தப்பட்டுள்ளனர். திராவிட முன்னேற்ற மாணவர் மாநாட்டில் நிறுவப்பட்ட அமைப்புக்குழு மாணவர் இயக்கத்தை இன்னும் ஆக்கமும் ஆற்றமும் உள்ளதாக ஆக்கிடும் என்று நம்புகிறோம்!

மற்ற மாணவர்களைவிட திராவிட மாணவர்களுக்குப் பொறுப்பும், வேலையும் அதிகமுள்

என. உலகிலுள்ள மற்ற மாணவர்கள்—இளை ஞர்கள் செப்பனிடப்பட்ட பாதை வழியே நடந்து செல்லுகின்றனர். திராவிட மாணவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்துள்ள திக்குக்குப் புதியபாதை அமைத்திடும் அரும்பணிக்கு உதவவேண்டிய நிலையிலுள்ளனர்.

உலகின் பெரும்பகுதியில், இளைஞர்களாயிருப்பவர்களெல்லாம் மாணவர்களாக, பள்ளிகளிலோ, கல்லூரிகளிலோ இருப்பார்கள், ஆனால் நமது நாட்டில் மாணவர்களாக இருக்க வேண்டிய இளைஞர்கள் மாணவர்களாக இல்லாத கொடுமையைப் பார்க்கிறோம். பள்ளியில்படித்து அறிவு விளக்கம் பெறவேண்டிய வயதில், திராவிட இளைஞர்களில் நூற்றுக்கு எண்பதுபேர், தொண்ணூறுபேர் வயலிலே உழைத்தும் வண்டி இழுத்தும், கல் உடைத்தும் கட்டை தூக்கியும், சேற்றில் அமிழ்ந்தும் சேரியில் உழன்றும், மக்கள் பண்பை மறந்து மாடாய், விலங்காய் ஒதுங்கி நிற்கின்றனர்! பள்ளிகளில் நுழைய, நுழைந்ததும் படித்து முடிக்க, கல்லூரிகளில் இடம்பெற, இடம்பெற்றதும் தொடர்ந்து முடிப்பதற்கான வாய்ப்பும் வசதியும் வெகு சிலருக்குத்தான் கிடைக்கிறது! அந்த வாய்ப்புக்கிடைத்தவர்கள், தமக்குக்கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக்கொள்வதுடன், வெற்றிபெற்று வெளிவந்ததும் பள்ளிகளுக்குள்ளும் கல்லூரிகளுக்குள்ளும் வரமுடியாமல் வெளியில் தேங்கிக்கிடக்கும் மனவிருளைப் போக்க, இளைஞர்களாயிருப்பவர்களை பள்ளிகளுக்கனுப்ப தங்களால் இயன்றவரை உதவவேண்டும்.

இருண்ட நாட்டில் ஒளிவிளக்கேற்ற திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபடுகிறது. தாழ்ந்துகிடக்கும் நாட்டை, ஏழ்மைப்பள்ளத்தில் வீழ்ந்துகிடக்கும் திராவிடத்தை நிமிர்த்தி இன்பபுரிக்கு அழைத்துச்செல்லும் அரும்பணியை கழகம் ஏற்றிருக்கிறது! முன்வைத்துள்ள பணி சுலபமானதல்ல, உணர்ச்சியுடன் கடுமையான உழைப்பு, தளராத உறுதி வேண்டும்! இளைஞர் உள்ளத்தில் இயல்பாக எழும் ஆர்வத்துடன், பணியைச் செய்து முடிப்பதற்கான வலிவு—அறிவுத்திறன் மிகவும் வேண்டும்! இந்தப் பண்புகள்தாம் வெற்றிக்கு வழியமைப்பவைகளாகும்!

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் மாநாட்டில், அறிஞர் அண்ணாவும், மற்றும் பலரும் மிகத் தெளிவாக விளக்கியதைப் போல, திராவிட மாணவர்கள் தமது கல்விப் பயிற்சியில் மிகவும் கருத்தூன்றி, வெற்றி காண்பிக்கவேண்டும்! பள்ளியிலும், கல்லூரியிலும் அவர்களுக்குக் கிடைத்துள்ள பொன்னான சந்தர்ப்பங்கள் பின்பு எவ்வளவுதான் முயன்றாலும் வரப்பெறாது! மாணவர்கள் அரசியலில் நேரடியாகப் பங்கு எடுத்துக்கொள்வதுகூடாது; அரசியல்கொள்கைகளை அறிந்துகொள்வதும், அவற்றை அறிவுத்திறனுடன் பாகுபாடு செய்யும் ஆற்றலும் திராவிட மாணவர்கள் பெறவேண்டும்! அரசியலைப்பற்றிய ஆர்வமும், அக்கரையும் அவசியம் இருக்கவேண்டும், அதனால் கல்லூரிப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு அரசியலில் நுழையும் நிலை பிறக்கக்கூடாது! அது இரு சார்புக்கும் பலன் தராது.

மாணவர்கள் காட்டும் அரசியல் ஆர்வத்தை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது. இன உணர்வும் நாட்டுப்பற்றும் மாணவர்களிடம் வளர்ந்திருப்பது, எதிர்காலத்தில் நல்லதொரு அரசியல் சூழ்நிலையை நாட்டில் உண்டாக்குமென்றும் நாம் நம்புகிறோம். திராவிட மாணவர்கள் காட்டும் அரசியல் ஆர்வம் அவர்களைச் சிறந்த மாணவர்களாக ஆக்க வேண்டும்; அந்த ஆர்வம் அவர்களுடைய பள்ளி அல்லது கல்லூரிப் பருவத்தை முன்னதாகக் குறைப்பதாகவோ, அல்லது காலவரையறையின்றி நீடிப்பதாகவோ இருக்கக் கூடாது!

இன்றைய சிறந்த மாணவர்கள்தாம் நாளைய சிறந்த அரசியல்வாதிகளாக, நாட்டின் நிலையை நிர்ணயித்திடும் பொருளாதார, சமூக நிபுணர்களாக ஆகக்கூடும்! பலமான அடிப்படை யில்லாவிட்டால் உயர்ந்த மாளிகையை எழுப்பமுடியாது, அறிவின் அடிப்படை சரியாக அமையாவிட்டால் அவர்களுடைய எதிர்காலம்—நாட்டின் எதிர்காலம் உயர் நிலையை அடையாது! பாசறையில் கற்றுக்கொள்ள மறந்ததை—தவறியதை, ஒரு போர்வீரன் போர்க்களத்தில் கற்றுக்கொள்ள முடியாது, எனவே போராட்டங்களுக்குத் தயார்செய்துகொள்ளும் ஒருவன் முதலில் பாசறைப் பயிற்சியில் சிறந்தவனாகவேண்டும்! அந்தவகையில் திராவிட மாணவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கல்விப்பயிற்சியில் சிறந்தவர்களாக மிளிரவேண்டும்!

இளம்பயிரின் பசுமைகண்டு பரவசமடையும் உழவனைப்போல, திராவிட மாணவரின் கூட்டத்தைக் கண்டு, திராவிடம் பரவசமடை

புன்னகைக்குப் பொன்னுடை

நாடக மேடைகளிலும், அதற்குமுன்பு தெருக்கூத்து நடைபெறும் இடங்களிலும்; கோமாளி என ஒருவன் வந்துபோவது அவசியமாக இருந்தது. நாடகத்தின் மத்தியில், வீரதீரப் பிரதாபங்களுடன் அல்லது சோகம், புலம்பல், கண்ணீர் இவைகளுடன் மற்ற பாகங்கள் மேடையில் ஆர்பரித்துவிட்டோ, அழுதுவிட்டோ போனதும் இடையிடையே கோமாளி தோன்றி மக்களைச் சிரிக்கவைப்பான். சிலசமயங்களில் மற்ற பாகங்களின் அமைப்பிலோ, நடிப்பிலோ குறை ஏற்பட்டுவிட்டால், "கோமாளி எப்பொழுது வருவான்?" என்று மக்கள் எதிர்பார்த்திருக்கவேண்டிய நிலையும் உண்டாகிவிடும்.

கோமாளி கோணங்கிச் சேட்டைகள் செய்வதன்மூலம் மக்களைச் சிரிக்கவைப்பான். நாடகமோ, கூத்தோ முடிந்ததும் அந்த சேட்டைகள் மறந்துவிடும். சிரிப்பு மூட்டும் "கோமாளித்தன" நடிப்பில்தான் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் முதலில் புகுந்தார். நாளடைவில் "சிரிக்கவைத்து அத்துடன் மக்களைச் சிந்திக்கவைக்கும் சீர்திருத்த நடிகராக—நகைச்சுவை அரசராக" அவர் உயர்ந்தார்.

சிரிப்பு—அதன்பின் சிந்தனையைக் கிளரும் கருத்து! நகைச்சுவை அரசர் எடுத்து நடித்த ஒவ்வொரு பாகமும் ஒரு புதுக் கருத்தை—நாட்டிற்குத் தேவையான நல்ல கருத்தை அளிப்பதாக இருந்தன! கசக்கும் மருந்தை இனிய தேனுடன் கலந்து தருவதுபோல, கடுமையான பல கருத்துக்களை சிரிப்பைத் தரும் நடிப்புடன் கலந்து அவர் நாட்டுக்கு வழங்கியுள்ளார்!

நடிப்புக்கும் நகைச்சுவைக்கும் மட்டுமல்லாமல், நாடிவந்தோர்க்கு அடைக்கலம் தருவதில், நல்லகாரியமென்றால் அள்ளிக்கொடுப்பதில் வள்ளலாக—அரசராக நமது தோழர் கிருஷ்ணன் அவர்களும், அவரது துணைவியார் மதுரம் அவர்களும் இருந்திருக்கிறார்கள்!

புண்பட்டு வேதனைப்படும் மக்களிடை புன்னகை வீசி மகிழ்வித்த நகைச்சுவை அரசருக்குப் பொன்னுடை போர்த்தித் தென்னிந்திய நடிகர் சங்கமும், தமிழ் மக்களும் பாராட்டியிருக்கின்றனர். நமது வாழ்த்து அவர்களுக்கு உரியதாகுக!

"வாழ்க பல்லாண்டு! வளர்க நுமது சீரிய முயற்சிகள்!" என்று கூறி, நகைச்சுவை யரசரையும், அவரது துணைவியாரையும் மனமுவந்து வாழ்த்துகிறோம்!

கிறது! நலிந்த உள்ளத்தில் நம்பிக்கை தோன்றுகிறது!

நம்பிக்கை நட்சத்திரங்கள்! வாழாத திராவிடத்தை வாழவைக்க வந்த செல்வங்கள்! நாடு வளர, நல்லோர் மனங்குளிர, "வாடா, தம்பி!" என்று அருமை அண்ணா அன்புடன் —பெருமையுடன் அழைத்திட ஒவ்வொரு திராவிட மாணவனும் தன்னைத் தயார்செய்து கொள்ளவேண்டும்!

வளர்க இளைஞர் கூட்டம்! வருக இன்பத் திராவிடம்!

கருத்துக் கதிர்

இறந்த மொழிக்கு உயிரளிக்கப்போகிறார்களாம்

சென்ற 11-ம் தேதி திருப்பதியில் கூடிய 'சமஸ்கிருத பரிஷத்தின்' 4-வது ஆண்டுவிழாவைத் துவக்கிவைத்து இந்தியத் தலைவர் ராசேந்திரபிரசாத் பேசுகையில், சமஸ்கிருத மொழியின் சிறப்பு பற்றிக் குறிப்பிட்டு அம்மொழிக்கு புத்துயிர் அளிக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

தற்பொழுது ஒருசிலர் எங்குசென்றாலும் சமஸ்கிருதம்! சமஸ்கிருதம்! என்று ஓயாது கூறிவருகின்றனர்.

சமஸ்கிருதம் பேச்சு வழக்கிலிருந்து ஒழிந்த ஒரு இறந்தமொழியாகும். இந்திய ஆண்டுப் புத்தகக் (Indian year Book) குறிப்புப்படி இந்தியாவில் மொத்தம் சமஸ்கிருதம் பேசத்தெரிந்தவர்களின் தொகை 555 பேர் என்றால் நிலைமையை நன்கு உணரலாம்.

ராசேந்திரபிரசாத் பேசுகையில் சமஸ்கிருதம் யாவரும் கற்றுக்கொள்ளவேண்டிய மொழியென்றும், அதற்குப் புத்துயிர் அளிக்க வேண்டியது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார். இங்கு இப்படிப் பேசிவிட்டு டில்லிக்குச்சென்றவுடன் இந்தியின் அவசியத்தைப் பற்றியும் பேசுவார்.

மொழிபற்றி பொறுப்புவாய்ந்த பதவியிலுள்ளவர்கள் அடிக்கடிக் குழப்பிக் குழப்பிப் பேசிவருவது ஒருபுறம் நகைப்பிற்கிடமானாலும் மறுபுறம் கவலைக்குமிடமாகிறது.

சமஸ்கிருதம் புத்துயிர்பெறவேண்டுமாம்! எப்படி? ஆயிரத்தெட்டு மொழிகள் வழங்கும் இந்நாட்டில், 100-க்கு 84 பேர்களுக்குமேல் எழுதப்படிக்கத் தெரியாத இந்நாட்டில், 84 பேர்களுக்குமேல் தாய்மொழிகூட புரியாத 36 கோடி மக்களைக்கொண்ட இந்நாட்டில், ஒரு 500 பேர்களால் மட்டும் பேசப்படும் ஒரு மொழி எப்படி புத்துயிர்பெறமுடியும்;

இறந்த ஒரு மொழி புத்துயிர் பெறவேண்டுமானால் உயிருடன் உலவிடும் மொழிகளைச் சாகடித்துவிட்டுத்தான் வரவேண்டும். இதை யாரும் மறுக்கமுடியாது. ஏனெனில் தமிழ் மொழியில் கலந்து மொழியின் வளத்தையே பாழ்படுத்திய சமஸ்கிருத சொற்களை களைந்தெறிந்து தாய்மொழியாம் தமிழில் மறுமலர்ச்சிகாண நாம்படும் துன்பங்கள் கொஞ்சமன்று.

ஒருவர் பல மொழிகள் கற்றுக்கொள்வதை நாம் வெறுக்கவில்லை. ஆனால் எழுதப்படிக்கத் தெரியாது, தாய்மொழியின் தன்மையறியாது பலகோடி மக்கள் இருக்கும் நிலைமையில் இறந்தொழிந்த ஒருமொழிக்கு புத்துயிர் அளிக்கவேண்டிய அவசியமென்ன? அப்படியே மொழியார்வத்தில் படிக்க விரும்பினால் மற்றமொழிகளைப்போல, இருக்கலாமே. இந்தியாவில் எல்லா பல்கலைக்கழகங்களிலும் ஜெர்மன், பிரெஞ்சு, அராபி, ஈப்ருபோன்ற பல மொழிகள் கற்றுக்கொள்ள வாய்ப்புகள் இருக்கின்றன. அதுபோல சமஸ்கிருதமும் ஒரு மொழியாக இருக்கலாமே!

ஆனால் ராசேந்திரபிரசாத் போன்றவர்கள் அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அதற்குப் புத்துயிர் அளிக்கவேண்டும் என்று கூறுவதின் மர்மம் என்ன? சமஸ்கிருதம் இந்துமதக் கலாசாரமொழியாம்! இந்தியக் கலாசார—அரசியல் ஒற்றுமைக்கு அம்மொழி மிகவும் அவசியமாம்!

இந்திய கலாசாரம், இந்துமதக் கலாசாரம், இந்திய ஐக்கியம் என்ற சொற்றொடர்களை வைத்துக்கொண்டு ஏக இந்தியாவின் காவலர்கள் ஏதேதோ பேசிவிட்டு இந்திய ஒற்றுமைக்குப் பாடுபடவேண்டும் என்று கூறிவிட்டுப் போய்விடுகின்றனர்.

ராசேந்திர பிரசாத் இந்தியாவின் ஐக்கியம் ஏற்படுவதற்கு சமஸ்கிருதம்தான் அவசியம் என்று பேசியிருக்கிறார்.

இந்தியாவெங்கும் மதச்சடங்குகள் ஒரேவிதமாகக் காணப்படுகின்றன என்று கூறி, அதனால் மதச்சடங்கிற்கான மொழியாகிய சமஸ்கிருதம் பரவினால் வட இந்தியா தென்னிந்தியா என்ற பேதம் மறைந்துவிடும் என்று எண்ணுகிறார் பிரசாத்.

பலப்பல நாடுகளைக்கொண்ட ஐரோப்பாவில் கிருத்தவம்தான் எல்லா நாடுகளிலும் பரவியிருக்கின்றது. சடங்குகள் எங்கும் ஒரேவிதமாகத்தான் இருக்கின்றன என்றாலும் எல்லா நாடுகளும் தத்தமது எல்லைக்கோடுகளை அழித்துவிட்டு ஒன்றாக இணைந்துவிடுகின்றனவா? இல்லையே!

வடநாடு தென்னாடு என்ற மனப்பான்மை நாளுக்குநாள், ஒவ்வொரு துறையிலும் தோன்றி வளர்ச்சிபெற்று வருகிறது!

வழக்கிலிருந்து அழிந்த மொழியான சமஸ்கிருதம் நினைவிலிருந்தும் மறையத்தொடங்குகின்றது! தமிழில் அர்ச்சனை என்றுகூட குரல்கள் கிளம்புகின்றன!

ஆகவே ஏதாவது உடனடியாக செய்தாக வேண்டும் என்று எண்ணுகிறார்கள்! எதை எதையோ சொல்லிப்பார்க்கிறார்கள்!

சைமன் பெரூட்

இன்றைக்குச் சுமார் 65 ஆண்டுகளுக்குமுன் ஒருநாள், வியன்னா நகரத்தில் ஜோசப் புரூயர் (Josef Breuer) என்ற மருத்துவர் தன்னோடு வேலைபார்த்துவந்த மற்றொரு இளம் மருத்துவரிடம், தன்னிடம் மருத்துவ உதவியை நாடிவந்த ஒரு இளம் பெண்ணைப் பற்றிக் குறிப்பிட்டார். அந்தப் பெண் இஸ்டீரியா (Hysterical Paralysis) என்ற நரம்புத்தளர்ச்சி மயக்க நோயால் பாதிக்கப்பட்டிருந்தாள். புரூயர் அந்தப் பெண்ணை இப்னாடிசம் (Hypnotism) என்ற உறங்குநிலை உண்டாக்கும் வித்தைகொண்டு ஆராய்ந்தபோது, தனக்கு முன்பு உண்டான மகிழ்ச்சியற்ற மனவெழுச்சி வயப்பட்ட பல அனுபவங்களை அவள் விவரித்துக்கூறினாள். ஆனால் அந்த அனுபவங்களை உணர்வுள்ள (Conscious) மனநிலையில் அவளால் நினைவுபடுத்திக் கொள்ளமுடியவில்லை. அந்த அனுபவங்களே அவளது நோய்க்குக் காரணமாக அமைந்திருந்தன. அவைகளைக் கூறியபின் அவளுடைய நோய் மறைந்துவிட்டது.

இந்த வியப்புக்குரிய நிகழ்ச்சிக்குப்பின் இரு மருத்துவர்களும் சேர்ந்து நரம்புத்தளர்ச்சி மயக்கநோயால் பாதிக்கப்பட்டபலரை ஆராய்ந்தனர். அவர்களிடமும், நினைவில் கொள்ள முடியாமல் மனதில் மூடிவைக்கப்பட்ட அனுபவங்களே அவர்களது நோய்க்கு அடிப்படையாக இருக்கக்கண்டனர்.

புரூயர் மேற்கொண்டு இதைப்பற்றி ஆராய எண்ணமில்லாமல் தனது வழக்கமான உடல் நோய் மருத்துவப் பணியிலேயே கவனம் செலுத்தலானார். ஆனால் அவருடன் இருந்த இளம் மருத்துவர் வியப்புக்குரிய மன அமைப்பின்பால் தனது கவனத்தைத் திருப்பினார். புறக்கணிக்கப்பட்ட நினைவுச்சுருளை சுமையாகக்கொண்டு மறைந்துகிடக்கும் மனதை ஆராய முற்பட்டார். பல ஆராய்ச்சிகளின் முடிவாக, மனிதனின் மன அமைப்புப்பற்றி புதிய புரட்சிகரமான கொள்கையையும் உளநோய் தீர்க்கவல்ல புதியதொரு முறையையுங் கண்டார். அவரே சைமன் பெரூட் (Sigmund Freud) என்பவராகும். அவர், தான் கண்டு பிடித்த முறைக்கு உளக்கூறுபாடு (Psycho-Analysis) என்ற பெயரைக் கொடுத்தார்.

சைமன் பெரூட் செக்கோசுலோவாகியாவில் பிரெய்பெர்க் (Freiberg) என்ற நகரில் 1856-ம் ஆண்டு மேத் திங்கள் 6-ம் நாள் பிறந்தார். தந்தையார் ஒரு கம்பளி வியாபாரி. அவரது இரண்டாவது மனைவியின் மூத்த பிள்ளையாக பெரூட் பிறந்தான். பெரூட் நான்குவயதுச் சிறுவனாக இருக்கும்பொழுது அவனது தந்தையார் குடும்பத்தோடு வியன்னா நகருக்கு வந்து குடியேறினார். பெரூட் நல்ல கல்விப் பயிற்சியைப் பெற வியன்னாவில் வாய்ப்பு ஏற்பட்டது. பள்ளியில் எல்லா வகுப்புகளிலுமே முதல் மாணவனாகச் சிறந்து விளங்கினான். மிகுந்த ஆர்வத்தோடு வியன்னா பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயின்றார். அப்போது மருத்துவப்பகுதியில் வியன்னா பல்கலைக்கழகம் சிறந்ததொரு இடமாகத் திகழ்ந்தது. பெரூடின் பிற்கால ஆராய்ச்சிகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் ஏற்ற அடித்தளமாக வியன்னா மருத்துவக்கல்லூரி அளித்த பயிற்சி அமைந்திருந்தது.

1881-ம் ஆண்டில் பெரூட் திறன்பெற்ற மருத்துவர் என்ற தகுதியைப் பெற்றார். மாணவராக இருக்கும்போதே புருக் (Brucke) என்ற பேராசிரியரின் கீழ் உடற்கூற்றியல் ஆராய்ச்சிச்சாலையிலும், பின் மெய்னெர்ட் (Meynert) என்பாரின்கீழ் மூளை அமைப்புக்கான ஆராய்ச்சிக் கழகத்திலும் பணியாற்றி வந்தார் (*1876—1882*).

1884-ம் ஆண்டில் அரசாங்க மருத்துவ விடுதியில் உதவியாளராக பணிபுரிந்துகொண்டிருந்தபோது பெரூட் ஒரு முக்கியமான கண்டுபிடிப்புக்குக் காரணமானவராகத் தோன்றத் தவறிவிட்டார். கோகா (Coca) என்ற ஒரு செடியின் சாற்றை வைத்து ஆராய்ச்சி செய்த போது, அது உடலில் பட்ட இடத்தில் உணர்ச்சியை அடக்கி மறத்துப்போகும் தன்மையை வெளியிடுவதைக் கண்டு பெரூட்

அதுபற்றி ஒரு குறிப்பு தயாரித்து வைத்தார். ஆனால் அவர் மேற்கொண்டு ஆராயவில்லை. அந்தக் குறிப்பைக் கண்டு அவரது நண்பர் ஒருவர் மேலும் ஆராய்ந்து, கோகெயின் (Cocain) என்ற, கண், காது, மூக்கு முதலிய புலனுறுப்புகளின் ரண சிகிச்சைக்கு பெரிதும் உதவும் மறத்துப்போகும் மருந்தைக் கண்டு பிடித்தார். பெருட் அதைக் கண்டுபிடிக்கத் தவறிவிட்டார்.

1885-ம் ஆண்டில் பெருட் பாரிசுக்குச் சென்று சார்கட் (Charcot) என்ற உள நோய் மருத்துவரிடம் சேர்ந்து அவரது மருத்துவ முறையைக் கவனித்தார். சார்கட் இப்னுடிச முறைகொண்டு சிலவகை உளநோய்களைக் குணப்படுத்திவந்தார். இப்னுடிச முறையில் பயிற்சிபெற்றதோடு சார்கட்டிடமிருந்து ஒரு புதிய கருத்தையும் தெரிந்துகொண்டார். ஒரு குறிப்பிட்ட கருத்துக்களை ஒருவரின் மனதிலே புகுத்தி அவரிடத்தில் நரம்புத் தளர்ச்சி மயக்க நோயை உண்டாக்கலாம் என்று ஒருமுறை சார்கட் கூறினர்.

வியன்னு திரும்பியதும் தான் கற்ற இப்னுடிச முறைகொண்டு உளநோய்களைக் குணப்படுத்த முயன்றுர் பெருட். இப்னுடிச முறையில் மருத்துவர்களுக்கு இருந்த நம்பிக்கையை விட மக்களுக்கு அதிக நம்பிக்கை ஏற்பட்டது. பெருடின் விடுதியில் கூட்டம் பெருகியது. ஆனால் இப்னுடிச முறை நல்ல வெற்றியை அளிக்கவில்லை. பெருட் இப்னுடிசமுறையைக் கைவிட்டு வேறொரு முறைக்கான ஆராய்ச்சியில் இறங்கினர்.

பாரிசுக்குச் சென்று திரும்பிய மறு ஆண்டு, 1886-ல் பெருட் ஆம்பர்க் நகரைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணந்துகொண்டார். பெருடின் குடும்பவாழ்க்கை கடைசிவரை மகிழ்ச்சி நிரம்பியதாகவே இருந்தது. அவருக்கு மூன்று பிள்ளைகளும் மூன்று பெண்களும் பிறந்தனர்.

1889-ம் ஆண்டில் பெருட் நான்சி என்ற நகருக்குச் சென்றுர். அங்கு பெர்ன்கீம் (Bernheim) என்ற பேராசிரியரின் இப்னுடிச ஆராய்ச்சிகளைக் கவனித்தார். அவரது ஆராய்ச்சிகளில் ஒரு சம்பவம் பெருடை மிகவும் கவர்ந்தது.

ஒரு நோயாளியை, இப்னுடிச உறக்கத்திலிருந்து விழித்தபோது, பெர்ன்கீம் இப்னுடிச நேரத்தின்போது நடந்த உரையாடலைக் கூறுமாறு சொன்னர். நோயாளி தனக்கு ஒன்றும் நினைவில்லை என்று கூறினர். ஆனல் பெர்ன்கீம் விடவில்லை. நோயாளியால் முடியும், கட்டாயம் கூறவேண்டும் என்று வற்புறுத்தினர். அதன்பிறகு நோயாளி ஏதோ கூற ஆரம்பித்தார். முதலில் தெளிவில்லாமல், பின் கொஞ்சம் சரியாக, கடைசியில் இப்னுடிச நேரத்தில் நடந்த உரையாடலைத் தெளிவாகக் கூறினர்.

நோயாளியின் மனதில் உரையாடலைப் பற்றிய அறிவு உறைந்திருந்தும் அவை உணர்வற்ற மனநிலையில் மறைந்திருந்தது. அதை உணர்வுள்ள மனநிலைக்குக் கொணர ஒரு நூதன முறையைக் கையாளவேண்டியதாயிற்று.

இந்த நிகழ்ச்சியின் ஆராய்ச்சியிலிருந்து, "திறன்பெற்ற ஒரு மனச்செயல் முறை இருக்கவேண்டும்; எனினும் அது மனிதனின் உணர்வுள்ள மனநிலையினின்றும் மறைக்கப்பட்டுப் பின் தங்கிக்கிடக்கின்றது" என்று பெருட் அறிந்தார். இந்தக் கருத்தில் உறுதி கண்டு வெற்றிகாண பெருடுக்கு வெகுநாள் பிடிக்கவில்லை.

பெருடின் மன அமைப்பு ஆராய்ச்சிக்குத் தக்க துணையாகத் தோன்றியவர்கள் மூவராகும். முதலாவதாக புரூயராகும். 1880—82-ல் புரூயருடன் சேர்ந்து ஆராய்ச்சி செய்ததில் கண்ட உண்மைகளைப் பற்றி முன்பே குறிப்பிட்டோம். இரண்டாவதாக பாரிஸ் நகர உளநோய் மருத்துவர் சார்கட் கூறிய அனுபவங்கள் பெருடுக்கு பெரிதும் உதவியாக இருந்தன. கடைசியாக பெர்ன்கீமின் ஆராய்ச்சிகள் பெருடை மனநிலை பற்றிய புதிய கருத்துக்கள் காணத் தூண்டியது.

இந்த மூவருடன் கொண்ட தொடர்பினல் பெருட் தனது ஆராய்ச்சியைத் தொடங்கினர். 1893-ல் புரூயருடன் சேர்ந்து செய்த ஆராய்ச்சிகளை விளக்கி **நரம்புத்தளர்ச்சி மயக்க நோயின் உள இயல் அமைப்பு** (On the Psychical Mechanism of Hysterical Phenomena) என்ற நூலை வெளியிட்டார். இரண்டாண்டுகளுக்குப்பின் வெளிவந்த **நரம்புத் தளர்ச்சி மயக்க நோயாராய்ச்சி** (Studies on Hysteria) என்ற நூலில் பெருடின உளக்கூறுபாடு (Psycho-Analysis) கொள்கை பற்றிய முதல் குறிப்புகள் காணப்பட்டது.

உளகூறுபாடு என்பதற்கு மூன்று வழிகளில் பொருள் கூறலாம். முதலாவதாக அது, நரம்பு சம்மந்தப்பட்ட நோய்களில் ஒன்றுகிய அதாவது நரம்புத்தளர்ச்சி மயக்க நோயைக் குணப்படுத்தவல்ல மருத்துவ முறையாகும். இரண்டாவதாக, அது பொதுவாக மன அமைப்பின் இயல்பையும் முக்கியமாக உணர்வற்ற மனநிலையின் அமைப்பையும்

ஆராய, கொள்ளப்படும் முறையாகும். கடைசியாக அது, பல ஆராய்ச்சிகளின் முடிவாக பெரூட் வகுத்த மனதின் இயற்கைத் தன்மை பற்றிய கொள்கையாகும்.

பெரூட், மனதின் செயல் முறையை மூன்று விதங்களாக பிரிக்கிறர். உணர்வுள்ள, (Conscious) முன்னுணர்வுள்ள (Preconscious) உணர்வற்ற (Unconscious) என்று மனநிலை மூன்றுவகைப்படும். உணர்வுள்ள மனநிலையின் செயல்முறைகள் எப்போதும் தெரியக்கூடியதாகும். முன்னுணர்வுள்ள மனநிலையின் செயல்முறைகள் உணர்வுள்ள மனநிலையின் ஓரத்தே மறைந்திருந்து எப்போதாவது உணர்வுள்ள மனநிலைக்கு மாறும். உணர்வற்ற மனநிலையின் செயல்முறைகளை தெரிந்து கொள்ள முடியாது; எளிதான வகையில் அவைகள் உணர்வுள்ள மன நிலைக்கு வெளிப்படாது.

எல்லா மனச்செயல்களும் உணர்வற்ற மனதிலிருந்துதான் தோன்றுகின்றன. சில செயல்கள் உணர்வுள்ள மனதிற்கு வரும்வரை வளர்ச்சிபெற்றுக்கொண்டே வருகிறது. சில செயல்கள் முன்னுணர்வுள்ள மனம்வரை வந்து நின்றுவிடுகின்றன, மூன்ருவதுவகைச் செயல்கள் உணர்வற்ற மனதிலேயே புதைந்து கிடக்கின்றன.

மனம் எண்ணங்களை தன்னகத்தே கொள்ள மறுக்கமுடியாது. ஆனல் எண்ணங்கள் முன்னுணர்வுள்ள, உணர்வுள்ள மனங்களுக்குள் புகுவதை மனம் கட்டுப்படுத்த முடியும், அதைச் செய்கிறது. எண்ணங்களைப் பொறுக்கித்தேர்ந்தெடுக்கும் இந்த இயக்கத்திற்குப் பெரூட் குறைகாண் இயக்கம் (Censor) என்று பெயர்கொடுத்தார். குறைகாணியக்கம், உணர்வற்ற மனதிலிருக்கும் விரும்பத்தகாத எண்ணங்களை முன்னுணர்வுள்ள மனதிற்குள் புகாதவாறு தடுக்கின்றது.

உணர்வற்ற மனதில் ஆதிகால இயல்பான உணர்ச்சித் தூண்டுதல்கள் அடங்கியிருக்கின்றன. பெரூட் இதை இட் (Id) (அது) என்றழைத்தார். உணர்வுள்ள மனதில் அடங்கியிருக்கும் எண்ணங்களை ஈகோ (Ego) (நான்) என்றழைத்தார். உணர்வுள்ள மனம் உணர்வற்ற மனதின் விருப்பங்களைக் கட்டுப்படுத்துகிறது. அதாவது, உணர்வுள்ள மனம் சமூக விதிகளை அறிந்துள்ளதாகையால் உணர்வற்ற மனதின் விருப்பங்கள் நிறைவேற்றக் கூடியனவா என்று தீர்மானிக்கின்றது. இப்படித் தீர்மானிக்கும் தன்மையை சூப்பர் ஈகோ (Superego) என்றழைக்கிறர்.

இந்த மூன்றுவித அமைப்புகளிடையே முரண்பாடு நேர்ந்தால் மூளைக்கோளாறு ஏற்பட்டு மனேவியாதி உண்டாகக் காரணமாகின்றது என்று பெரூட் கூறினர். இன்று எல்லா உளநோய் வல்லுநர்களும் இதை ஒப்புக்கொள்ளுகின்றனர்.

பெரூட் மனிதன் காணும் கனவுகளைப்பற்றியும் தனது ஆராய்ச்சியை செலுத்தினர். அவை எங்கிருந்து வருகின்றன? ஏன் வருகின்றன? பன்னெடுங்காலமாக வழங்கிவந்த கொள்கைகள் அவருக்குத் தெளிவைத் தரவில்லை. மனதைப்பற்றிய ஆராய்ச்சியில் உறுதி கண்டவுடன் கனவுகளைப்பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினர். அவர் கனவுகளைப்பற்றிய தனது ஆராய்ச்சிகளையும் கொள்கையையும் விளக்கி 1900-ம் ஆண்டில் ஒரு நூல் வெளியிட்டார். அவரது கொள்கை புரட்சிகரமாக இருந்தது. அதுவரை மக்கள் கனவுகளைப் பற்றிக்கொண்டிருந்த மூடக்கொள்கைகளை நன்ருக விளக்கிற்று.

கனவுகள், உணர்வற்ற மன விருப்பங்களின் உருவகச் செயல்களாகத் தோன்றுகின்றன. நேரடியாக உணர்வுள்ள மனதிற்குள் அனுப்ப முடியாத விருப்பங்களை உருவகங்களின் மூலமாக குறைகாண் இயக்கத்தையும் ஏமாற்றி உணர்வுள்ள மனதில் தூங்கும்போது உணர்வற்ற மனம் தெரிவிக்கின்றது. இதை இன்று எல்லா உளநோய் வல்லுநர்களும் ஒப்புக்கொள்கின்றனர்.

மிகவும் துன்பங்களைத் தரவல்ல எண்ணங்களையும் துயரங்களையும் மக்கள் உணர்வுள்ள மனதில் வைத்துக்கொள்ள முடியாமல் உணர்வற்ற மனதிற்குள் தள்ளி புதைக்கின்றனர் என்று பெரூட் கூறினர்.

குழந்தைப் பருவத்தில் ஏற்படும் அனுபவங்கள் வாழ்க்கையில் கடைசிவரை ஆதிக்கம் செலுத்தும் என்பதை ஆராய்ச்சிகளின் மூலம் நிரூபித்து குழந்தையிலேயே மனிதன் 'மனிதனு'கிருன் என்ருர்.

பெரூட் வெளியிட்ட கொள்கைகளில் இரண்டை எதிர்த்து கருத்துக்கள் வழங்கப்பட்டன. "மனிதர்கள் கடைசி முடிவில் கெடுதலைச் செய்கிறவர்களாகவும், நரம்புத்தளர்ச்சி நோயுடையவர்களாகவும் ஆகிவிடுவார்கள்" என்று பெரூட் கூறினர். "சமூகம், மக்களை அவர்களது உணர்வற்ற மன விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ள இடந்தராது. நம்மிடத்தில் உணர்வற்ற மனவிருப்பங்கள் இருக்கின்றன. அவைகளை அழிக்க முடியாது. ஆகவே

கடைசியில் முடிவும் கொடூரமாகத்தான் இருக்கும். ஆனால் அந்த விருப்பங்களை அடக்கிப் போராடாமல் ஒருவகை வழியைத் தேடிக் கொண்டு வாழ முற்படலாம். அதுதான் செய்யக்கூடிய சிறந்த வழி" பெருடின் இக்கருத்தைப் பல உளநோய் வல்லுநர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கின்றனர். உணர்வற்ற மன விருப்பங்கள் சமூக விதிகளுக்கு விரோதமானவை என்ற இன்றியமையாமை இல்லை; எந்தவிதத்திலும் மாற்றிக்கொள்ளலாம் என்று வாதிடுகின்றனர்.

பெருட் வெளியிட்ட மற்றொரு கொள்கை பற்றியும் அதிகமான கருத்து வேறுபாடுகள் தோன்றின. உணர்வற்ற மனதில் உறைந்து கிடக்கும் விருப்பங்கள் சிற்றின்ப உணர்ச்சியைக் (libido) கொண்டதாக இருக்கின்றனவென்றும், உணர்வற்ற மனம் அதை நிறைவேற்ற பாடுபடுகிறதென்றும் கூறினார். இதை வன்மையாக யாவரும் கண்டிக்க முற்பட்டனர். பின்னர் பெருட் தான்கூறிய சிற்றின்ப உணர்ச்சி என்ற சொல்லுக்கு விளக்கம் கூறினார். இன்பந்தேடும எந்த உணர்ச்சியையும்—நல்ல உணவின் விருப்பத்திலிருந்து கேட்டு மகிழும் இசைவரை—குறிக்கும் சொல்லாக அது கூறப்பட்டிருக்கிறதென்றார்.

முதலில் குறிப்பிடும்போது பெருட் சிற்றின்ப உணர்ச்சியை மட்டுந்தான் குறிப்பிட்டார். அனேகமாக, பல நரம்புத்தளர்ச்சி நோய்கள் ஏற்பட நிறைவேற்றப்படாத, நிறைவேற்ற இயலாத சிற்றின்ப விருப்பங்களே அடிப்படைக் காரணமாகின்றன என்றார்.

சிற்றின்ப தூண்டுதலும், பிறவகை இன்பந்தேடும் உணர்ச்சிகளும், உரிமை கொள்ளுதல் உருவாக்குதல் போன்ற உணர்ச்சித் தூண்டல்களும் வாழ்க்கையில் முக்கிய உள இயல் சக்திகளாக அமைகின்றன என்று இன்றைய உளநோய் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

நரம்புத்தளர்ச்சி நோயுடையவர்களை குணப்படுத்த இப்னடிச முறை பயன்படாதபோது பெருட் ஒரு புது முறையைக் கண்டுபிடித்தார். நோயாளியின் உணர்வற்ற மனதிலிருக்கும் எண்ணங்களை வெளிப்படுத்த 'உளக்கூறுபாட்டறிஞனின் நாற்காலி' (Psycho Analyst's Couch) என்ற வழியை ஏற்படுத்தினார். மருத்துவ வரலாற்றில், அது ஒரு சிறந்த வழியாகக் கருதப்படுகிறது.

நோயாளியின் மனத்தைத் திருப்பக்கூடிய சூழ்நிலை அமைந்த ஒரு அறையில் ஒரு நாற்காலி இருக்கும். உளக்கூறுபாட்டறிஞர் நோயாளியை அந்த நாற்காலியில் உட்கார வைத்து ஆராய்வார். இதற்குத்தான் 'உளக்கூறுபாட்டறிஞனின் நாற்காலி' முறை என்று பெயர்.

என்றாலும், இம்முறை எல்லா நோயாளிகளிடத்திலும் பயனளிப்பதில்லை. இதற்கு ஆகும் செலவும் நேரமும் அதிகமாகும். சில நோயாளிகளுக்கு ஆண்டுக்கணக்கில்கூட சிகிச்சை நடைபெறவேண்டியிருக்கும். தற்பொழுது பொறுக்கி எடுக்கப்பட்ட ஒருசிலர் தான் இம்முறையின்மூலம் முழு சிகிச்சைபெறுகின்றனர்.

பெருடின் முறைகளும், கண்டுபிடிப்புகளும் தோன்றாவிட்டால், சிக்கல்நிறைந்த மன அமைப்பைப்பற்றி நாம் சிறிதுகூடத் தெரிந்துகொண்டிருக்கமுடியாது.

பெருட் வியன்னா நகரத்திலேயே, தனது ஆராய்ச்சிகளை நடத்திக்கொண்டும் அதைப் பற்றி எழுதிக்கொண்டும் தனது பிற்கால வாழ்க்கையைக் கழித்தார். உளக்கூறுபாடு முறை ஆராய்ச்சியில் பத்து ஆண்டுகள்வரை தனியாக உழைத்தார். 1906-ம் ஆண்டில் தான் பல ஆராய்ச்சியாளர்கள் அவருடன் சேர்ந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள், ஆல்டர் (Alder), பிரில் (Brill), பெரன்சி (Ferenczi), ஏனஸ்ட் ஜோன்ஸ் (Ernest Jones), ஜங் (Jung), சாட்கெர் (Sadger), ஸ்டெகல் (Stekel) முதலியோர் ஆகும். இவர்களின் கூட்டு முயற்சியால் 1908-ம் ஆண்டில் முதலாவது உளக்கூறுபாட்டறிஞர்களின் மாநாடு நடைபெற்று உளக்கூறுபாடுக் கழகம் தோன்றியது. இன்று உலகெங்கும் அக்கழகம் பரவியிருக்கிறது.

பெருட் ஒரு யூதர் என்பதற்காக நாசிப் படையினர் 1933-ல் அவரது புத்தகங்களைக் கொளுத்தினர். 1938-ல் அவர் வியன்னாவை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தப்பட்டு லண்டன் மாநகருக்கு வந்து சேர்ந்தார்.

பெருட் 1939-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23-ம் நாள் இங்கிலாந்தில் ஆம்ஸ்டெட் நகரில் தனது மகன் இல்லத்தில் 83-வது வயதில் உயிர்துறந்தார்.

பெருடின் கொள்கைகளில் சிலவற்றிற்குத் தற்பொழுது கருத்துவேறுபாடுகள் இருந்தாலும் வருங்காலத்தில் அவரது கண்டுபிடிப்புகளின் முக்கியத்துவம் புலனாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அறிவியல்துறையில் ஒரு புதிய பாதை வகுத்த சைமன் பெருட் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற அறிவியல் அறிஞர்களில் ஒருவராகும்.



(34)

தபோலோகம்

பிதுர்லோகத்திற்கு 1200 கோடி மைல்களுக்கு மேல் தபோலோகம் ஆரம்பிக்கிறது. தபோலோகம் அதன் பெயருக்கேற்ப மகரிஷிகள், தபோவனர்கள், சேரும் உலகமாகும். இந்த மகரிஷிகளில் முதன்மையாக இருப்பவர் சனகர் ஆவார்.

சனகர் சூர்யவம்சத்து அரசபரம்பரையைச் சேர்ந்தவராவார். அந்த வம்சத்தில் நிமி என்ற ஒரு அரசன் இருந்தான். அவன் பூலோகத்தில் பெரிய யாகமொன்று செய்ய விரும்பினான். அதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து யாகத்தை முன்னின்று நடத்த வசிட்டரைக் கூப்பிட்டான். யாகத்தை நடத்தி வைப்பதில் வசிட்டருக்கு மிக்கவர்களாக யாரும் இருக்கமுடியாது. எனவேதான் நிமி, மாமுனிவர்களில் சிறந்தவரான வசிட்டரைத் தன் யாகத்துக்குத் தேர்ந்தெடுத்தான். ஆனால் வசிட்டருக்கு எப்பொழுதும் அழைப்பு இருந்துகொண்டேயிருந்தது. நிமி குறிப்பிட்ட அதே நாளில், தேவலோகத்தில் இந்திரன் ஒரு யாகம் நடத்த ஏற்பாடு செய்திருந்தான். இந்திரன் கொடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டு—நிமி பூலோகத்தில் ஒரு அரசன், இந்திரன் தேவலோக அரசனல்லவா, ஆதலால் அவன் அழைப்பு நிமியின் அழைப்பைவிட வசிட்டருக்குப் பெரிதாகப்பட்டது—வசிட்டர் இந்திரனுடைய யாகம் முடிந்ததும் வருவதாகக் கூறி, தேவலோகம் போய்விட்டார். யாகத்திற்கு எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து, வசிட்டர் வராதுபோனதைக் கண்டு மனமுடைந்த நிமி, சப்த முனிவர்களில் மற்றொருவரான கௌதமரைக் கூப்பிட்டான். கௌதமர்—அவர்தான் அகலிகையின் பதி. காட்டில் தான் நடத்திவந்த தவத்தையும் ஆச்சிரம வாழ்க்கையையும் நிறுத்திவிட்டு நிமியின் நகரத்துக்கு வந்து, யாகத்தை ஆரம்பித்து, முறைப்படி நடத்திவைத்தார். வசிட்டரைப்போலவே கௌதமரும் வேதசாத்திரங்களில் தலைசிறந்தவராதலால், யாகத்தில் எந்தக்குறையும் வைக்காது, சரியான மந்திரங்களையோதி, முறைப்படி மூவருக்கும் தேவருக்கும் அவிகளைத்தந்து, யாகத்தை முடித்தார். யாகம் முடிந்ததும், யாகப் புரோகிதருக்குரிய தான தட்சணைகளைப் பெற்று கௌதமர் தனது ஆசிரமத்துக்குத் திரும்பினார். யாகம் நடத்தி முடித்த அயர்வில், அரசன் படுத்துத் தூங்கினான்.

இந்திரனுடைய யாகத்தை முடித்துக்கொண்டு, வசிட்டர் அவசர அவசரமாக நிமியின் யாகத்தை நடத்த வந்தார். அவர் வரும்பொழுது, யாகம் முடிந்து, யாகசாலை காலியாகக் கிடந்தது. தனக்காகக் காத்திராமல், மற்றொருவரை வைத்து யாகத்தை நடத்திவிட்டானே என்று நிமியின்மீது வசிட்டருக்குக் கோபம் வந்தது. யாகசாலையிலிருந்து அரண்மனைக்கு வந்தார். அங்கும் அவரை எதிர்கொண்டழைக்க யாரையுங் காணோம். யாகத்தை முடித்துவிட்ட களைப்பில் அரசனும் மற்றவர்களும் அயர்ந்து உறங்கிக்கொண்டிருப்பதை வசிட்டர் கண்டார். தாம் வருவதற்குக் காத்திராதது மட்டுமல்ல, வந்த பின்னும் வரவேற்காமலிருப்பதைப் பார்த்ததும், அரசன்மீது வசிட்டருக்கு அடங்காத கோபம் வந்தது. "பிடிசாபம்! உன் உயிர் உன் உடலைவிட்டு நீங்குவதாக!" என்று உறங்கிக்கொண்டிருக்கும் அரசனைப் பார்த்துச் சாபம் தந்தார்.

அரசன் உறக்கத்திலிருந்து விழித்தான்.

வசிட்டரின் சாபத்தை அறிந்தான். அவனுக்கும் கோபம் வந்தது. 'தான் செய்த யாகங்கள், தவங்கள் இவற்றின் பலனை முன்வைத்து, "நான் உறங்கும்பொழுது நீர் சாபம்கொடுத்தமையால், உம்முடைய உயிரும் உம் உடலை விட்டு நீங்குவதாக!" எனப் பதிற் சாபங் கொடுத்தான். இருவருடைய சாபங்களும் பலித்தன. வசிட்டருடைய சாபத்தால், நிமியின் உயிர்பிரிந்தது, உடல் விழுந்தது. அதே போல் வசிட்டருடைய உயிரும் உடலைவிட்டுப் பிரிந்து சென்றது.

யாகத்திற்கு வந்திருந்த முனிவர்கள் நடந்ததை அறிந்தனர். அரசனுடைய தேகத்தைத் தைலத்திலிட்டு, கெட்டுவிடாமல் பக்குவப் படுத்தி ஓரிடத்தில் வைத்து, பிரிந்துபோன உயிரை மீண்டும் அதில் கொண்டுவந்து சேர்க்க, ஒரு யாகம் செய்தனர். யாகத்தைப் பெற்றுத் திருப்தியடைந்த தேவர்கள், காற்றுருவாக அலைந்துகொண்டிருந்த நிமியைப் பார்த்து, "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்கள்.

நிமி யோசித்தான், அழிகின்ற தேகத்தை விட்டு, நிரந்தரமாக இருக்க அவன் விரும்பினான். "தேவர்களே! இனித் தேகம் எனக்கு வேண்டாம். உலகிலுள்ள எல்லோருடைய கண்களிலும் இருக்க விரும்புகிறேன்!" என்று நிமி கேட்டுக்கொண்டான். தேவர்கள் வரத்தை அளித்து மறைந்தனர். அந்த வரத்தால்தான், எல்லாவுயிர்களும் இமையை அசைத்து, நிமிடமாக்கிக்கொண்டிருக்கின்றனவாம். உயிர்கள் இமையசைத்தலாலும், அதிலிருந்து விநாடிக்கணக்கு, நிமிடக்கணக்கு வந்ததற்கும் புராணம் தரும் காரணம்—கதை இதுவாகும்,

நிற்க நிமியின் உடல் மீண்டும் உயிர்பெற்று எழாமல், தைலத்திலிட்டபடி அப்படியே இருந்தது, அரசன் இறந்துவிட்டான். அரசனுக்குப் புத்திரப்பேறு கிடையாது, எனவே அந்த நாடு அரசனில்லாமல் வருந்தியது. அரசனின் உடலுக்குள் பழையபடி உயிரைக் கொண்டுவர முனிவர்கள் செய்த யாகமும் குறித்த பலனைக் கொடுக்கவில்லை. அரசனும் இல்லை, இளவரசனும் இல்லை என்ன செய்வதென்று கலங்கி, அரசனிடம் எப்படியாவது ஒரு மகனைப் பிறக்கச்செய்யவேண்டுமென்ற ஆர்வத்தால், பதஞ்செய்யப்பட்டிருந்த உடலை (பிணத்தை) எடுத்துவந்து, அதன் தொடையில் கனமான மத்தொன்றை வைத்துக் கடையத்தொடங்கினர்கள். முனிவர்கள் இப்படிக் கடைந்ததும், அதன் பலனாக ஒரு மகாபுருடன் அந்த இடத்தில் தோன்றினன். அவ்வாறு உடலைக் கடைய ஜனித்ததால், அவனுக்கு ஜனகன் எனவும், மிதிலன் எனவும் அவனுக்குப் பெயரிடப்பட்டன. உயிர் நீங்கிய தேகத்திலிருந்து பிறந்ததால், விதேகன் எனவும் ஜனகருக்குப் பெயர் வந்தது. இந்தப் பெயர்களிலிருந்து, மிதிலன் ஆண்ட நகரம் மிதிலை என்று பெயர்பெற்றது.

ஜனகர் யாகஞ்செய்து உழுதபொழுது, கலப்பையின் அடி முனை ஒரு பெட்டியின்மீது பட, அரசரும் மற்றவர்களும் அந்தப் பெட்டியைத் திறந்து பார்க்க, அந்தப் பெட்டிக்குள் பச்சிளங் குழந்தை இருப்பதைக் கண்டனராம். அந்தப் பெண் குழந்தையே சீதை என்ற பெயரில் மிதிலை நகரில், வளர்ந்துவந்தாள். ஜனகருடைய பெண்ணாகச் சீதை வளர்ந்ததால், அவருடைய பெயரையொட்டி அவளுக்குப் பல பெயர்கள் உண்டாயின. ஜனகருடைய பெண் ஜானகி எனவும், மிதிலருடைய பெண்ணாக மைதிலி எனவும், விதேகருடைய பெண்ணாக வைதேகி எனவும் சீதைக்கு வேறு பெயர்கள் சூட்டப்பட்டன.

நிமியால் சபிக்கப்பட்டு, உயிர் நீங்கப்பெற்ற வசிட்டரின் நிலை என்னவாயிற்றென்று பார்க்கலாம். உடலைப் பிரிந்ததும், வசிட்டரின் உயிர் மேலுலகம் போய் பிரமதேவரிடம் முறையிட்டுக்கொண்டது. வசிட்டர் பிரமதேவரின் மானச புத்திரர்களில் ஒருவரல்லவா? உடலுருப்பில்லாமல் தவிக்கும் மகனின் உயிரைப் பார்த்ததும், பிரமனுக்கு அதனிடம் இரக்கம் உண்டாயது. ஆனல் அவரால் உடனே சாப விமோசனம் தரமுடியவில்லை. சாபவிடை எப்படிக் கிடைக்கும் என்பதை மட்டும் பிரமதேவர் தெரிவித்தார். "மித்ராவருணர் கலப்பால் உனக்குத் தேகம் கிடைக்கும்" என்று அவர் சொன்னர். வசிட்டருக்கு ஒன்றும் புரியவில்லை. மித்திரன் வருணனுடைய நண்பரில் ஒருவன், வருண உலகத்தில் இருப்பவன். மித்திரன், வருணன் இவர்கள் இருவரும் எப்படி ஒருகுழந்தையை—தேகத்தைத் தரமுடியும்? அவர் சந்தேகித்தார். எனினும் தந்தை சொல் தட்டாமல் வருணலோகம் வசிட்டர் சென்றார்—அதாவது வசிட்டருடைய உயிர் சென்றது.

வசிட்டர் சென்றபொழுது, மித்திரன் இந்திரலோகத்துக்குப் பொயிருந்தார். அங்கு

ஊர்வசியின் ஆடல்பாடலைக் கண்டு மயங்கினுன், ஆட்டத்தைப் பார்க்காமல் ஆளை ஆளைப் பார்த்துப் பெருமூச்சுவிடும் மித்திரனின் நிலையைப் புரிந்துகொண்ட ஊர்வசி மித்திரன் இருக்கும் பக்கம் அதிகம் ஆடியும், கடைக்கண் பார்வை அருளியும் தன் கருணையைத் தெரிவித்தாள். இந்திரசபையைவிட்டதும், மித்திரனும், தேவமாது ஊர்வசியும் சந்தித்தனர். பேச்சு முடிவில், வருண உலகத்தில் இருக்கும் மித்திரனுடைய மாளிகைக்கு வர, ஊர்வசி ஒத்துக்கொண்டாள். மட்டற்ற களிப்புடன் மித்திரன் தன்னுலகத்துக்குப் போய், மாளிகையில் தெய்வமாதுக்காகக் காத்திருந்தான், வந்திருப்பவர்களை வழியனுப்பிவிட்டு, வரவிருந்தவர்களுக்கு வார்த்தைகள்சொல்லி அனுப்பிவிட்டு ஊர்வசி வருணலோகம் வந்தாள்.

தனது மாளிகையின் அருகில் வருணன் உலவிக்கொண்டிருந்தான். அவனது கூரிய கண்கள் தூரத்தில் ஒரு அழகான பெண் வருவதைக் கண்டுபிடித்தன. வரவர வருவது ஒரு தேவமாது என்று கண்டான். கடைசியாக அவள் ஊர்வசி என்று தெரிந்தது. ஊர்வசியின் ஆட்ட பாட்டத்தை—அவள் அழகைக் கண்டு மயங்கியவர்களில் வருணனும் ஒருவன். அந்த ஆடும் மங்கை தனது உலகில்—தனது நகரில்—அதுவும் தன் மாளிகையருகேயுள்ள நந்தவனத்திற்குள் அசைந்து வருவதைப் பார்த்ததும், ஆகா! வருணன் அப்படியேப் புளகாங்கிதம் அடைந்துவிட்டான். "அவளே, ஊர்வசியே என்னைத் தேடி வந்துவிட்டாளே!" என்று ஆனந்தத்துடன் முன்னோடிச்சென்று, "வரவேண்டும், வரவேண்டும்! ஊர்வசியே! தேவமாதே! தெய்வலோக ஜோதியே! வர வேண்டும்!" என்று வரவேற்ருன்.

எதிர்பாராதவிதமாய் வருணன் எதிரில் நின்று வரவேற்பதைப் பார்த்ததும், ஊர்வசித் தயங்கி நின்ருள்.

"ஏன், தயக்கம்? நான் அசடன், இந்திர சபையில் நானிருந்த இடத்தில் நீ, அதிகமாக நடனமாடியதையும், நானிருக்கும் பக்கம் நோக்கிப் புன்னகை செய்ததையும் புரிந்துகொள்ளாத அசடன் நான்! நீயாக இவ்வளவுதூரம் தேடிவந்தது, என் பாக்கியம்தான்!"

வருணன் பல்லை யிளித்துக்கொண்டு நின்ருன், ஊர்வசி மேற்செல்லமுடியாமல் பின் தங்கி நின்ருள்.

"இதுதான் உங்கள் மாளிகையா? நீங்கள் இங்கு உலவிக்கொண்டிருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை."

"ஊர்வசி! நீ ஒருவார்த்தை சொல்லியிருந்தால்—ஒரு சிறு கண் சாடை காட்டியிருந்தால் போதுமே! நான் உன் மாளிகையில் வந்து காத்திருப்பேனே! இதுகூட என் மாளிகையல்ல, உன் மாளிகைதான்! இந்த மாளிகை மட்டுமல்ல, இந்த நந்தவனம், ஊர் அரசு, ஏன் இந்த வருண உலகமே இனி உன்னுடையதுதான்! வா, நின்றுகொண்டிருந்தால் உன் காலடி நோகும்!" என்று ஊர்வசியின் கைப் பிடித்து மாளிகைக்குள் வருணன் அழைத்துக் கொண்டு சென்ருன். தட்டவும் முடியாமல் ஏற்றுக்கொள்ளவும் முடியாமல், ஊர்வசி சென்ருள்......

வருணனின் உபசாரங்களும், கொஞ்சுதலும் அதிகமாயின, அவள் போகவேண்டுமெனத் துடித்தாள்.

கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்த வருணனுக்குக் கோபம் வந்தது. "ஏன் இங்கு தங்கியிருக்க உனக்குப் பிடிக்கவில்லையா? இல்லை, என்னைப் பிடிக்கவில்லையா? சொல்லிவிடு."

ஊர்வசி தலைவணங்கி, "இல்லை, பிரபு! தங்களைப் போன்ற தேவர்களுக்குச் சேவை செய்யத்தானே நாங்கள் இருக்கிறேம். ஆனல் இன்று..." என்று இழுத்தாள்.

"இன்று?"

"வேறொருவருக்கு......"

"வேறொருவருக்கு?" வருணனின் பற்கள் நெறிவது கேட்டது.

"வாக்குத்தத்தம் செய்துவிட்டேன்."

வருணன் கோபத்தால் குதித்தான். "யாரவன்? இந்திரனே, எமனே, என்னைவிட அவன் உயர்ந்தவனே? யாரவன் உன்னை வரச்சொன்னவன்?"

"கோபித்துக்கொள்ளாதீர், பிரபு! மித்திரன் என்பவர்......"

வருணனின் கோபம் திடீரென்று மாறியது. "யார், மித்திரனு? என் நண்பனுயிற்றே!

அவனா உன்னை அழைத்திருக்கிறான், பெரிய ஆள்தான்! அதுதான் இந்திரசபையிலிருந்து வந்ததும் வேகமாகத் தன் மாளிகைக்குப் போய்விட்டானே? நீ அவனுக்கு இன்று வாக்குத்தத்தம் கொடுத்துவிட்டாய், அல்லவா?"

"ஆமாம், பிரபு! கொடுத்த வாக்கை நாங்கள் மீறுவதில்லை."

"அப்படியானால், போ! ஆனால் உன்னிடத்தில் என்னைப்போன்ற உருவத்துடன் ஒருவன் பிறப்பான் போ!" என்று வருணன் சொல்லி ஊர்வசியை அனுப்பினான்.

ஊர்வசி காத்துக்கொண்டிருக்கும் மித்திரனிடம் சென்றாள். சிறிது நேரத்துக்குமுன், வருணனிடம் சென்றுவிட்டு ஊர்வசி தன் மாளிகைக்கு வந்துள்ளாள் என்பதை மித்திரன் தெரிந்துகொண்டான். "நேராக என்னிடம் வராது, வருணனிடம் போய்விட்டு வந்ததால், நீ தெய்வலோகத்திலிருந்து நீங்கி, பூலோகத்தில் பெண்ணாகப் பிறப்பாய்" என்று மித்திரன் சாபங்கொடுத்தான். பூலோகம் செல்வதற்குமுன், வருணனுடைய தேஜசும், மித்திரனுடைய தேஜசும் கூடிப் பிறக்கவிருந்த குழந்தையின் அம்சத்தை, ஊர்வசி ஒரு குடத்திலிட்டுப் போனாள்.

உடலின்றி உலவிக்கொண்டிருந்த வசிட்டரின் உயிர், அந்தக் குடத்தினுள் புகுந்து, உருவத்தை அடைந்தது. இது வசிட்டருடைய கதையில் வந்திருக்கவேண்டும். ஆனால் சனகரின் தந்தையான நிமியின் கதையுடன் இணைந்திருப்பதால், இங்கு கூறப்பட்டது.

(தொடரும்)

மூடநம்பிக்கையினால் பாழ்படும் உணவுச்சத்து

"மக்கள் சத்துள்ள உணவுப்பொருள்களைக் கொள்ளமுடியாததற்குக் காரணம், முக்கியமான உணவுப்பொருள்கள் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, அறியாமையினாலும் சில முக்கியமான உணவுகள் ஒதுக்கப்படுகின்றன."

மேற்கண்டவாறு டாக்டர் சிசிலி. டி. வில்லியம்ஸ் என்பவர் ஒரு ஆங்கில மருத்துவப் பத்திரிகையில் (The Lancet) குறிப்பிடுகிறார்.

"கிழக்கு ஆப்பிரிக்காவில், மாமிசமும் பாலும் அதிகமான அளவில் கிடைக்கும் வகையிருந்தும் அங்குள்ள பெண்களுக்கு அவை கிடைப்பதில்லை. பெண்கள் முட்டைகள் உட்கொண்டால் மலடாகிவிடுவார்கள்; கோழிகளைச் சாப்பிட்டால் கூவுவார்கள்; ஆட்டு மாமிசம் தின்றால் அவர்களுக்குத் தாடிகள் வளரும்—இப்படிக் கூறப்பட்டிருக்கிறார்கள் (இதைப் பார்த்தால் அங்குள்ள ஆண்கள், ருசியான உணவுவகைகளை தாங்களே கொள்வதற்கு ஒரு சரியான திட்டம் தீட்டியிருக்கிறார்கள் என்பதுபோல் தெரிகிறது,

இந்தியாவில் நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது, ஒரு முட்டையைச் சாப்பிடுவதுகூட கொலைபாதகத்திற்குச் சமமாகக் கருதப்படுகிறது.

ஆப்ரிக்கா கோல்கோஸ்ட் பகுதிகளில் புட்டிபாலுக்கு கடுமையான எதிர்ப்பு காணப்படுகிறது. புட்டிப்பாலில் கொழுப்புப் பொருள் மட்டும் நீங்கி ஊன் வளர்க்கும் பொருள் (Protein) அடங்கியிருக்கிறது. என்றாலும் வெறுக்கப்படுகிறது.

மலேயர்களுக்கிடையே புட்டிப்பால் ஒரு ஆடம்பரப் பொருளாகக் கருதப்படுகிறது. அங்கு கிடைக்கும் எருமைப்பாலைச் சாப்பிடுவதைக்கூட அழகற்ற ஒரு செயலாகக் கருதுகின்றனர்."

சிறுகதை

தோட்டக்காரன்

"அதோ! அந்தத் தோட்டம்தான். விரிந்து பரந்து இருக்கும் பெரிய சோலை அல்ல அது. மிகச் சிறியதுதான். எங்கள் குழந்தைப் பருவத்தில் அதுதான் எங்களுக்கு 'பெரிய' உலகமாக இருந்தது. அந்த உலகம் மிகவும் உல்லாசமானது" என்று தன் மகளிடம் தோட்டத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வந்த அருணகிரி எதையோ நினைத்தவர் போல், "அன்னம்! உனக்கு மாடசாமியை நினைவிருக்கிறதா?" என்றார் அருகிலிருந்த தன் தமக்கையைப் பார்த்து.

"மகளுக்கு தோட்டத்தைப்பத்திச் சொல்லிக்கிட்டே மாடசாமியை நினைவிருக்கான்னு கேக்கிறியே" என்றாள் அருணகிரியின் தமக்கை அன்னத்தம்மாள்.

"ஆமா அக்கா! தோட்டம்னு பேசினா தோட்டக்காரன் மாடசாமியைப் பத்திப் பேசாம இருக்கமுடியுமா?"

"அது சரிதான்! அவனைத் தெரியாம என்ன? சின்ன வயசில நான் பார்த்தது, கேட்டது எல்லாத்திலயும் அவனைத்தான் நல்லா ஞாபகமிருக்கு. அவன் தலைகூட கோழி முட்டைமாதிரி இருக்குமே......"

"மிகக்குறுகிய நெற்றி."

"பூனைக்கண்."

"எப்பொழுதும் சுழன்றுகொண்டிருக்கும்."

"தாடை எலும்பு பளபளப்பாக முன்னோக்கி வளர்ந்திருக்கும்,"

"முகத்தில் கொஞ்சம்கூட உணர்ச்சியே இருக்காது."

"ஒல்லியாகவும், பார்ப்பதற்கு பலமற்றவன் போல இருப்பான்."

"உண்மையிலேயே, ரொம்ப பலசாலி."

"காலணாக் காசை கையில் வைத்துச் சுலபமாக வளைத்துவிடுவான்."

செம்மண் நிறத்தைப் போன்ற அவன் தலைமயிரை மறந்துவிட்டோமே என்றார் அருணகிரி. இதுவரை பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த தேன்மொழி, "இம்மாதிரி சின்னஞ்சிறு குறிப்பெல்லாம் எப்படி அப்பா மனப்பாடம் செஞ்சதுமாதிரி சொல்றீங்க", என்றாள், ஆச்சர்யத்துடன்.

"தேன்மொழி! நானும் அத்தையும் பேசிக் கொண்டு இருந்தோமே அந்த மாடசாமியின் கதை எங்களிருவருடன் முடிந்துவிடக்கூடியது அல்ல. வாழையடி வாழையாக வரவிருக்கும் நம் சந்ததிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டியதொன்று. உன் தாத்தா—அதுதானம்மா, என் அப்பா—இந்தச் சிந்தனையைத் தூண்டும் செய்தியை எங்களுக்குச் சொன்னார். 'மாடசாமியின் ஆராய்ச்சி' என்று இதற்குப் பெயரிட்டதும உன் தாத்தாதான். புராண, இதிகாச ஆராய்ச்சிகளைக்காட்டிலும் இதைப் பெரிதாகவே மதித்தார். அயோத்தி இராமனைப்பற்றிய கம்பன் வர்ணனை, இலக்கிய ரசனையில் தேர்ந்ததாயும், அணி, அலங்காரங்களில் சிறந்ததாயும் வேண்டுமானால் இருக்கலாம். ஆனால் இந்த மாடசாமியைப் பற்றிய வர்ணனை எந்தவிதத்திலும் கம்பனின், ராமன் படப்பிடிப்பிற்குக் குறைந்தது அல்ல. சொல்லப்போனால், ராமனைப் பற்றிய சில பல முரணான குணக்கோட்பாடுகளைப் போலன்றி, மாடசாமி முன்பின் முரணற்ற குணச்சித்திரமாகவேச் சித்தரிக்கப்பட்டிருக்கிறான்."

"அப்பா! நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்பதே புரியவில்லை."

"ஆம், தேன்மொழி! மாடசாமியைப் பற்றி உனக்குச் சொல்லவேண்டும் என்பதை மறந்துவிட்டே நான் பேசிக்கொண்டிருக்கிறேன். உன் அத்தையும் நானும் சின்னஞ் சிறு வயதினர்களாக இருந்தபொழுது மாடசாமி எங்களுக்கு அதிகப் பழக்கப்பட்டவனாகவே இருந்தான். உன் தாத்தா வீட்டில் அவனைப் பற்றிய பேச்சாகவே இருக்கும். ஒவ்வொருவரும் மாடசாமியைப் பார்த்ததாகவே கற்பனை செய்துகொண்டிருந்தனர்."

" யார் அப்பா, அந்த மாடசாமி ?"

தன் அருமை மகளின் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்காமல் அருணகிரியும் அவர் தமக்கை அன்னத்தம்மாளும் வாய்விட்டுச் சிரித்தனர். அவர்கள் இருவரும் வாழ்க்கையையும், அன்றாட நிகழ்ச்சிகளையும் வெவ்வேறு கோணத்திலிருந்து பார்ப்பவர்கள். இருவரும் வாய்விட்டுச் சிரிக்கிறார்கள். தேன்மொழியின் ஆர்வம் அளவுகடந்தது.

" அப்பா ! மாடசாமி யார் ? அவனைப்பற்றி நான் தெரிந்துகொள்ளவேண்டும் என்று நீங்க நினைக்கிறீங்க, சொல்லுங்கப்பா " என்றாள்.

" தேன்மொழி ! மாடசாமி ஒரு தோட்டக்காரன். மண்ணையே நம்பி வாழும் எண்ணற்றவர்களில் அவனும் ஒருவன். பட்டணத்தில் ஒரு பங்களாவில் தோட்டக்காரனாக இருந்தான். பங்களாவாசிகளுக்கு அவன் வேலை திருப்திதரவில்லை. வேலையிலிருந்து விலக்கப்பட்டான். அன்றிலிருந்து தினக்கூலிக்கு வேலை செய்துவந்தான். பணம்படைத்தவர்கள் என்ன நம்மைப்போன்ற சாதாரண மனிதர்களைப்போன்றா இருப்பார்கள். அந்த இரும்பு மனம் படைத்தவர்கள் சென்ற இடமெல்லாம் மாடசாமியைப் பற்றிய தப்பான எண்ணங்களைப் பரப்பிவிட்டனர். இதன் பயனாக மாடசாமியை வேலைக்கு வைப்பவர்கள் அதிகம் இல்லை. வேலைக்கு வைத்துக் கொண்ட மிகச்சிலருக்கும் தங்களையறியாமல் அவன்மீது சந்தேகம் வரும். முடிவு, அவன் வேலைக்குச் சென்ற இடத்தில் எல்லாம் நல்ல பெயர் கிடைப்பதில்லை."

" தேன்மொழி ! உன் அப்பா மேஜைமீது பேனா, கடிகாரம் ஏதாவது தேடும்போது கிடைக்காட்டா, 'மாடசாமி இங்கு வந்திருந்தானோ'ன்னு சொல்வாரே கேட்டதில்லையா ?" என்றாள் அன்னம்.

" ஆமாம் தேன்மொழி ! மொத்தத்தில் மாடசாமிக்கு நல்ல பெயர் இல்லை."

" ப்பூ......இவ்வளவுதானா ?"

" இல்லை தேன்மொழி ! மாடசாமியைப் பற்றிய முக்கியமான சேதி என்னவெனில் எங்களுக்கு அவனை நல்லாத் தெரியும். இருந்தபோதிலும்......"

" அவன் உயிரோடு வாழ்ந்ததே இல்லை " என்று முடித்தாள் அன்னம்.

கோபத்தோடு பார்ப்பதுபோல் நெற்றியைச் சுளித்துக்கொண்டு அன்னத்தைப் பார்த்தார் அருணகிரி.

" மாடசாமி இல்லையென்று உண்மையாகவேதான் கூறுகிறாயா ? ஒரு மனிதன் எந்தெந்த வழிகளில் வாழமுடியும், உலவமுடியும் என்றெல்லாம் சிந்தித்துப் பார்த்துத்தான் கூறுகிறாயா ? உனக்கு என்ன தெரியும். மாடசாமி உயிருடன் உலவத்தான் செய்தான். ஆனால் அவன் உலவிய முறையே தனி. அவன் வாழ்வே தனித்தன்மையுடையது."

" எனக்கு ஒன்னும் புரியல்ல அப்பா. நீங்க ஒன்னு சொல்றீங்க, அத்தை வேறென்னமோ சொல்லுது " என்று பரிதாபமாகக் கூறினாள் தேன்மொழி.

" கவலைப்படாதே. போகப்போக எல்லாம் தெளிவாகப் புரியும். தொடர்ந்து சொல்கிறேன் கேள். மாடசாமி பிறக்கும்பொழுது அவனுக்கு நடுத்தர வயது. நான் அப்பொழுது சிறுவன். ஆனால் உன் அத்தை கொஞ்சம் பெரியவள். பட்டணத்தை யடுத்த சிறு கிராமத்தில்தான் நாங்கள் வசித்துவந்தோம். அமைதியான இந்த வாழ்க்கையில் அலை எழும்பியதுபோல வந்தாள் மங்களப் பாட்டி. பட்டணத்தில் பெரிய பங்களாவில் வசித்துவந்தாள். நமக்கு ஏதோ தூரத்து உறவாம். இந்த உறவு விட்டுப்போகாமல் இருக்க உன் தாத்தாவையும், பாட்டியையும் அடிக்கடி பட்டணத்தில் தன் பங்களாவில் விருந்திற்கு அழைத்தாள். உன் தாத்தாவிற்குப் பட்டணத்துப் பாட்டி வீட்டிற்குச் செல்லப் பிடிக்கவே இல்லையாம். உனக்குத்தான் தெரியுமே தாத்தாவின் குணம். ஆனால் வெளியே சொல்லிக்கொள்ள முடியாமல் வேதனைப்பட்டுக்கொண்டு இருந்தார். பாட்டியோ வேதனையை வெளியே காட்டாமல் சிரித்த முகத்துடன் இருப்பாள். அவர்களிருவரும் பட்டணத்துப் பாட்டியின் அழைப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள எவ்வளவோ முயன்றனர். ஒவ்வொரு வாராந்திர விடுமுறையன்றும் பாட்டியின் 'பாண்டியாக்' நம்ம வீட்டிற்கு வந்துவிடும். அன்றாட அலுவல்களில் இதுவும் ஒன்றாகப் போய்விட்டது. 'வரமுடியாது' என்று வெளிப்படையாக மறுப்பதைத்தவிர வேறு வழி இல்லை. உன் தாத்தாவும் துணிந்துவிட்டார், இனிமேல் பட்டணத்துப் பாட்டி வீட்டிற்குப் போவதில்லை என்று. வரமுடியாது என்பதற்கான காரணம் கூறும் வேலையை உன் பாட்டி இடம் விட்டுவிட்டார். பாவம் ! என் அம்மா—உன்பாட்டிதான்—

713

அவளுக்கு என்ன தெரியும். சூதுவாது தெரியாதவள். பொய்பேசி அறியாதவள்.''

"அவளுக்குத் தெரியாது என்பதல்ல. அவள் அதை விரும்பவில்லை, அவ்வளவு தான். விரும்பினால் எல்லோரைப்போல அவளும் பொய் பேசுவாள்'' என்றாள் அன்னம்.

"உண்மைதான். நல்ல காரணங்கள் இருக்கும்போது அதைவிட்டு இல்லாத காரணங்களைக் கண்டுபிடிக்கும் பழக்கம் அவளுக்கு இல்லை. அப்படித்தான் ஒருமுறை அன்னத்திற்கு இருமல் நோய் கண்டிருக்கிறது. பட்டணத்திற்கு இங்கிலேயில் வரமுடியாது என்று உன் பாட்டி கூறிவிட்டாள்.''

"ஆனல் அது உண்மைதானே!'' என்றாள் அன்னம்.

"உனக்குச் சுகமான பிறகு ஒருநாள் பட்டணத்துப் பாட்டி வந்து வற்புறுத்திக் கூப்பிட்டார்களாம். வீட்டிற்குப் போகாமல் தப்பித்துக்கொள்ள வேறு வழியின்றி பொய் சொல்லத்துணிந்தாள் உன் பாட்டி. ஞாயிற்றுக்கிழமையன்று தோட்டக்காரன் வருவான் என்றும், வருவதற்கு இயலாது என்றும் உன் பாட்டி கூறினாள். செடியும் கொடியுமாக வரம்பின்றி வளர்ந்துகிடந்த தோட்டத்தைப் பார்த்தாள் மங்களப்பாட்டி. இதுதானா தோட்டம் என்று நினைத்தாளோ என்னவோ, உன் பாட்டியைப் பார்த்துத் தோட்டக்காரனைத் திங்கள் அல்லது செவ்வாய்க்கிழமை வரச் சொல்வதுதானே என்றாள். விடுமுறை நாட்களில்தான் அவன் வருவான், மற்ற நாட்களில் அவன் வேறு இடத்தில் வேலை பார்ப்பதால் வரமாட்டான் என்று உன் பாட்டி கூறினாள். வேறு வழியில்லாத பட்டணத்துப்பாட்டி தோட்டக்காரனின் பெயர் என்ன என்றாள். சற்றும் தயங்காமல் 'மாடசாமி' என்றாள் உன் பாட்டி. மாடசாமி என்ற ஆள் பெயரிடப்பட்டு அன்றிலிருந்து உலவிவருகிறான். பெயரைக் கேட்ட மங்களப் பாட்டி தனக்குப் பழக்கமான பெயர்போல இருப்பதாகச் சொன்னாள். அவன் எங்கு தங்கியிருக்கிறான் என்று மங்களம் கேட்டாள். 'அவன் வீடு, விலாசமெல்லாம் யாருகண்டா, தேவைப்பட்டு சேதி அனுப்பிச்சா தன்னலை வர்றான்' என்றாள் உன் பாட்டி.

"நான் நினேச்சது சரியாப்போச்சு! அவன் நாடோடி......சோம்பேறி. மிக மோசமானவன் அவனிடம் எச்சரிக்கையா நடந்துக்கணும்'' என்று கூறிச்சென்றாள் மங்களப்பாட்டி.

"கற்பனையில் என் தாய் பெற்றெடுத்த மாடசாமிக்கு உயிரும் உருவமும் உண்டாக்கி உலகில் உலவவிட்டுவிட்டார்கள்'' என்றார் அருணகிரி. தேன்மொழியின் பள்ளித்தோழி மான்விழியும், மலர்க்கொடியும் வந்தனர். அருணகிரி அவர்களிடம் நடந்த வரலாற்றைச் சொன்னார்.

"என் தாய் பெற்றெடுத்துப் பெயரிட்டு உலவவிட்ட தோட்டக்காரனைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்.''

"என்ன, உங்கள் தாயா? தோட்டக்காரனா? விவரமாகக் கூறுங்கள்'' என்றாள் மான்விழி.

"உண்மையில் ஒரு தோட்டக்காரன் பிறக்கவும் இல்லை வாழவும் இல்லை. மனித உருவமே அல்ல. 'ஒரு தோட்டக்காரனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்' என்று என் தாய் ஒரு நாள் சொன்னாள். அந்த நிமிடத்திலிருந்து தோட்டக்காரன் உயிருடன் உலவுகிறான்.''

"அவன் பிறக்கவில்லை என்றால், எப்படி வாழ்ந்திருக்கமுடியும்'' என்றாள் மலர்க்கொடி.

"அவன் வாழ்ந்த வாழ்வு விசித்திரமானது'' என்றார் அருணகிரி.

"கற்பனை உலகில் வாழ்ந்தானோ?'' என்றாள் குரலில் கேலியும், கிண்டலும் தொனிக்க, மலர்க்கொடி.

"ஏன் கற்பனை உருவங்களுக்கு வாழ்வு இல்லையா? நீங்கள் போற்றிப் புகழ்ந்து ஏற்றித் தொழும் புராணப் புருடர்களும், இதிகாசக் கடவுள்களும் மனித வர்க்கத்தில் இடம் பிடித்துக்கொண்டது கிடையாதா? தொன்று தொட்டு இன்றுவரை வெறும் கற்பனைக் கடவுள்கள் மனிதனின் அன்றாட வாழ்வில் புகுந்து அவனை ஆட்டிப் படைக்கவில்லையா? உலகின் எல்லாப் பாகங்களிலும் எந்தக்காலத்திலும் 'மாடசாமி'யைக் காட்டிலும் எந்தவிதத்திலும் உயர்ந்த ரகத்தைச் சேராத கற்பனை உருவங்கள் மக்கள் மனதில் அன்பையும், வெறுப்பையும்; நம்பிக்கையையும், நாசத்தையும்; தூண்டிவிடக் காரணமாக இருந்ததில்லையா? எத்தர்களின் கற்பனையில் உதித்த எத்தனையோ கடவுள்கள் ஏமாந்தவன் மனதில் குடியேறி கொலையைத் தூண்டிவிடவும், பூஜையை ஏற்றுக்கொள்ளவும், சட்டத்தையும் பழக்க வழக்கங்களையும் தன் இச்சைப்படி இயற்றுவித்தது கிடையாதா?''

"மலர்க்கொடி! புராணங்களை எடுத்துக் கொள். உலகம் தோன்றிய காலத்திலிருந்து இருக்கின்றன அவைகள். 'மாடசாமி' வேறு யாருக்கும் அதிகம் அறிமுகமாகாத, விளம்பர

மாகாத ஒரு கற்பனை உருவம். என்றைக்கோ வையைக் கரையில் கரைபுரண்டு வரும் வெள்ளத்திற்கு அணைபோடவந்ததாகக் கூறப்படும் 'சொக்கன்' திருவிளையாடற் புராணத்தில் சொக்கநாதராக வந்து மக்களின் உள்ளத்தில் பக்தியையும் பயத்தையும் உண்டாக்க முடிந்தது. திருக்கச்சி நம்பிக்கு தீவட்டி பிடித்த 'அருளாளன்' மக்கள் மனதில் அருள் சுரந்திடச்செய்ய முடிந்ததல்லவா? பரிக்கும், பன்றிக்கும் மற்ற மிருகங்களுக்கும் பிறந்தவர்கள் எனக் கூறப்படும் கடவுளர்கள் எத்தனையோ காவியத்திற்கும், கதைக்கும் கருப்பொருளாய் விளங்கவில்லையா? கடவுட் காதைகளில் வரும் கதாநாயகர்களின் திருக்கல்யாண குணங்கள் இல்லை இந்த 'மாடசாமிக்கு' மதியற்றவர்களின் மனதைக் கவரும் மந்திரசக்தி மாடசாமிக்குக் கிடையாது. சிந்திக்கத் தெரிந்தவர்களின் சிந்தையை மட்டுமே கவரும் சக்திதான் 'மாடசாமிக்கு' இருந்தது. காவிய வல்லுநர்களால் கவினுறக் காட்டப்பட்டு, ஓவிய வல்லுநர்களால் கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்களில் தீட்டிக்காட்டப்படும் சக்தி 'மாடசாமி'க்கு இல்லை. மலர்க்கொடி! இரண்டொரு தினத்தில் பேசி முடிக்கக்கூடியதல்ல இந்தக் கடவுளர்களின் காதை. இப்பொழுதாவது உனக்குப் புரிகிறதா 'மாடசாமி' எப்படிப்பட்டவன் என்பது."

"நீங்கள் எடுத்துக்காட்டியதிலிருந்து ஓரளவு புரிகிறது" என்றாள் மலர்க்கொடி.

"மாடசாமி வாழ்ந்திருந்தவன்தான். ஒரு பொருள் வாழ்வதற்கு அதற்கு உருவம் தேவையில்லை என்ற உண்மை நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் தெரியும். ஒருபொருளுக்கும் அதன் குணத்திற்கும் உள்ள தொடர்புதான் உருவம். இந்த உருவம் ஒரு பொருளையும் அதன் குணத்தையும் தொடர்பு படுத்திக் காட்டுகிறது, அவ்வளவுதான்,"

"உண்மைதான்! ஆனால் குணங்கள், தன்மைகள் இவைகள் இல்லாமல் இருப்பது ஒன்றும் இல்லாததற்குச் சமம்தானே!" என்றாள் மான்விழி. அதைக் காதில் வாங்காமலே அருணகிரி தொடர்ந்தார்.

"மாடசாமி பட்டணத்தில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்தான். சில நூற்றாண்டுகளுக்குமுன் தண்டகாருண்யத்திலோ, தாருகாவனத்திலோ பிறந்திருந்தால் ஒரு அரக்கனாகவோ அல்லது ஒரு பிசாசாகவோ ஆக்கப்பட்டிருப்பான்."

அத்தையம்மாள் எல்லோருக்கும் காப்பி கொண்டுவந்து கொடுத்தார்கள். காப்பியைக் குடித்துக்கொண்டே "மாடசாமி என்ன பேயா, பிசாசா?" என்றாள் மலர்க்கொடி.

"இல்லை என்று சிலரும் 'ஆம்' என்று பலரும் கூறுவார்கள்" என்றார் அருணகிரி. "மாடசாமியைப்பற்றிப் பயங்கரமான எண்ணம்தான் பெரும்பாலோரின் மனத்தில் நிலவியது. ஆனால் அவனுடன் நெருங்கிய தொடர்புகொண்டவர்களுக்குத்தான் அவனுடைய நல்ல குணங்கள் தெரியும். தெரிந்தோ, தெரியாமலோ அவனைப்பற்றித் தவறான எண்ணத்தை மக்களிடையே பரப்பிவிட்டுவிட்டார்கள், என நினைக்கிறேன். பட்டணத்துப்பாட்டி அவள் வீட்டிற்கு என் தாயும், தந்தையும் செல்வதற்குத் தடையாக அவன் இருக்கிறான் என அவன்மேல் கோபம்கொண்டாள். கொண்ட கோபத்தின் விளைவு மாடசாமி ஒரு குடிகாரனாக, திருடனாக, ஒன்றுக்கும் உதவாத சோம்பேரியாக அவளால் கற்பனை செய்யப்பட்டான். ஆனால் நாங்கள் குறைந்த ஊதியம்தான் கொடுத்துவந்தோம். அதிகப் பணம் கேட்கும் தன் தோட்டக்காரனுக்குப் பதிலாக மாடசாமியை வைத்துக்கொண்டால் குறைந்த ஊதியத்தில் நிறைய வேலை வாங்கலாம் எனக் கணக்கிட்டாள். அவன் எதையும் திருடிவிடாமல் கண்காணித்துக்கொண்டால் தனக்கு லாபம்தான் என்று முடிவு செய்து என் தாயிடம் மாடசாமியை பட்டணத்தில் தன் வீட்டிற்கு வேலைக்கு அனுப்பும்படி கேட்டாள். அம்மாவும் வேறு வழியின்றி ஆகட்டும் என்றாள். அடுத்த ஞாயிறன்று மாடசாமியை எதிர்பார்த்து ஏமாந்தாள் பாட்டி. மறுநாள் என் தாயைப்பார்த்து 'எங்க அந்தப்பய மாடசாமி ஆளையே காணோம். அவன் அட்ரஸ் கொடு, நான் நேர போயி கூப்பிட்டுவாரேன்' என்றாள். அவனுக்கு வீடேது, வாசலேது என்று என் தாய் கூறினாள். பாட்டிக்குச் சந்தேகம் வேலைக்கு மாடசாமியை அனுப்ப விருப்பமில்லாமல் அவன் விலாசத்தைத் தெரிந்துகொண்டு வேண்டுமென்றே தெரியாது என்று கூறுவதாக நினைத்தாள். பாட்டியைச் சொல்வானேன், உலகில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவுகள், தீர்ப்புகள், வரலாறு குறித்துவைத்திருக்கும் முடிவுகள் எல்லாம் இதைப்போலத்தான் இருக்கின்றன. உலகில் தனக்கு இழைக்கப்படும் தவறுகள் எல்லாம் நியாயத்தின் அடிப்படையில்தான் என்று மனிதன் உணர ஆரம்பித்தால், மனிதன் தன் கற்பனையில் மற்றொரு உலகைத் தோற்றுவித்து அதில் வாழ முற்பட்டிருக்கமாட்டான். இறந்தகால மக்களைப் பார்த்து வருங்கால சந்ததிகள் ஒரு நல்ல தீர்ப்பு

அளிக்க முடியாது. எந்தச் சூழ்நிலையில், எதற்காக ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்தார்கள் என்று அவர்களைக் கேட்க முடிவதில்லை. அந்தச் சூழ்நிலை, சுற்றுச்சார்பு, பழக்க வழக்கங்களை இவைகளை அறிந்து அவர்களுக்கு நல்ல தீர்ப்பு வழங்குவதற்குள் நாம் அவர்களை மறந்தேவிடக்கூடும்.”

“கடைசியாகப் பாட்டி என் தாய் சொல்வது உண்மைதான் என ஒத்துக்கொண்டாள். ஆனால் மாடசாமியைத் தேடுவதை மாத்திரம் நிறுத்தவில்லை. நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், அண்டை அயலார்கள் முதலியவர்களிடம் மாடசாமியைப்பற்றி விசாரிக்கத் தவறுவதில்லை. அவர்களில் ஒருசிலர் மாடசாமியைப் பற்றிக் கேள்விப்பட்டதே இல்லையென்றனர். மிகப்பலர் அவனை எங்கோ சந்தித்ததாக நினைவிருப்பதாக மட்டும் சொன்னார்கள்.”

“மாடசாமியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அவனை அடையாளம் தெரியாதே” என்றான் சமையல்கார சாம்பு,

“மாடசாமி அடிக்கடி நம்ம கடைக்கு வரப்போக இருப்பான். ஆனால் அவன் ஆள் அட்ரஸ்தான் தெரியல்ல” என்றார் மளிகைக் கடை மாவன்னா, ராவன்னா, பழனியப்ப செட்டியார்.

மாடசாமியைப் பல இடங்களில் பார்த்ததாக நிரூபிக்கப் போதுமான சாட்சியம் வக்கீல் வைத்தியநாதய்யரிடமிருந்தது. வால் நட்சத்திரம் தோன்றியபொழுது மாடசாமியைத் தன் தோட்டத்தில் 15 நாள் வேலைக்கு வைத்திருந்ததாகச் சொன்னார் அவர்.

ஒருநாள் பகல் பத்துமணி இருக்கும். என் தந்தை அவர் அறையில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க வீட்டினுள் நுழைந்த பட்டணத்துப் பாட்டி, “மாடசாமியைப் பார்த்தேன். ஆம் இப்பொழுதுதான் பார்த்தேன். நிச்சயமாக அவனாகத்தான் இருக்கவேண்டும்” என்று கூவினாள். “கொண்டாராம் சேட் பங்களா சுவற்றில் ஏறிக்குதித்து படேல் ரோட்டில் திரும்பி வேகமாகச் சென்று மறைந்துவிட்டான். அவன் மாடசாமியாகத்தான் இருக்கவேண்டும், நாற்பத்தைந்து அல்லது நாற்பது வயதிருக்கும். ஒல்லியாக இருந்தான். கூன் விழுந்தவன்போல் நடந்தான். அவன் ஆடைகள் அழுக்காக இருந்தன. நாடோடிபோல இருந்தான்” என்றாள்.

“நீங்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம். உங்கள் வர்ணனை மாடசாமிக்கும் ஒத்திருக்கும்” என்றார் என் தந்தை.

“ஒத்திருப்பதென்ன, அவனேதான் மாடசாமி. இல்லாவிட்டால் நான் ‘மாடசாமி’ என்று உரத்துக் கூவியதும் திடுக்கிட்டபடி திடீரென்று படேல் ரோடில் திரும்பி மறைவானேன்?”

“தப்பியோடிய கைதிகளைப் பிடிப்பதற்காகப் போலீசார்கள் அப்படிப் பெயரைக் கூப்பிடுவதன் மூலம் தங்கள் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்வார்கள். பரவாயில்லையே, பாட்டிகூட இதெல்லாம் தெரிஞ்சுவைச்சிருக்காங்களே!”

“எனக்குத் தெரியாதா என்ன? அவனை ஆளைப்பார்த்தாலே எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கல்ல. நீங்கதான் யோசனையில்லாம அவனைப் போய் வேலைக்கு வைச்சுக்கிட்டீங்க. ஆளைப் பார்த்தாலே இவன் நல்லவன், இவன் கெட்டவன்னு நான் சொல்லுவேன். மாடசாமி முகத்தைச் சரியாகப் பார்க்காட்டாலும் முதுகைப் பார்த்ததிலிருந்தே அவன் ஒரு பெரிய திருடன்னு தெரியுதே. கொலை பலிக்குக்கூட அஞ்சமாட்டான், பய. அவன் காதைப் பார்த்தாலே தெரியுமே பெரிய காதகன்னு.”

“அவன் காதைக்கூட அவ்வளவு உன்னிப்பாக் கவனிச்சிருக்கீங்களே!”

“இதென்ன, தூசு, தும்புகூட என் பார்வையிலிருந்து தப்பமுடியாது. உன் பெண்டு பிள்ளையெல்லாம் நல்ல இருக்கனும்னா அந்தப் பய மாடசாமியை இந்த வீட்டில் அடி எடுத்து வைக்கவிடாதே. முதல்ல இப்ப இருக்கிற பூட்டை எல்லாம் மாத்திட்டுப் புதுப்பூட்டா வாங்கிப் பூட்டு,”

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு ஒருநாள், பட்டணத்துப் பாட்டியின் தோட்டத்திலிருந்து மாங்காய்கள் களவாடப்பட்டுவிட்டன. திருடு போன சுவடு கண்டுபிடிக்க முடியாமற்போகவே, பாட்டி அந்தத் திருட்டிற்குக் காரணம் மாடசாமிதான் என்று நினைத்தாள். போலிசுக்குத் தகவல்கொடுத்து அவர்கள் வந்து சோதனை செய்ததின்பேரில் மாடசாமிதான் திருடினான் என்று முடிவுகட்டினார்கள். கொஞ்சகாலமாகவே வயிற்றுக்கும், வாய்க்கும் இல்லாத நாலைந்துபேர் கும்பலாகக் கூடிக்கொண்டு பட்டணத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில திருட்டுக்களைச் செய்து வந்தனர். அதைப்போலவே, பாட்டி வீட்டிலும் யாரோ கைதேர்ந்த திருடனால் திருட்டு நடந்திருக்கிறது. யாரும் வந்துபோன காலடி

கூடக் கிடையாது. ஆகையால் மாடசாமியைத் தவிர வேறு யாரும் இதைச் செய்திருக்க முடியாது என சோதனை செய்த துப்பறியும் இலாகா துரைசாமி கூறினர்.

பட்டணத்திலிருந்து வெளியாகும் 'டெய்லி டுப்' என்ற பத்திரிக்கை பாட்டியின் வீட்டில் மாங்காய்கள் களவுபோனது பற்றியும், இந்தக் களவை மாடசாமி என்ற பிரபல திருடன் செய்ததாக நம்புவதற்குப் போதிய ஆதாரம் இருப்பதாகவும், போலீசார் தீவிரமாகப் புலன் விசாரித்து வருவதாகவும் தீட்டியிருந்தது. அத்துடன் குறுகிய நெற்றி, ஒருநிலையின்றி சுழலும் கண்கள், முன்னேக்கி வளர்ந்திருக்கும் முகவாய்க்கட்டை, ஒல்லியான தேகம், கூன் விழுந்தவன்போன்ற நடை, சாதுவான தோற்றம். ஆனல் காலணு காசை இரண்டு விரல்களால் வளைத்துவிடும் அளவிற்குப் பலம்பொருந்தியவன். மிகத்திறமையுடன் செய்யப்பட்ட பல திருட்டுகளுக்குக் காரணம் 'மாடசாமி' என்று யூகிப்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன என்று ஒரு தனி விசேஷ இதழ் வெளியிட்டது.

பட்டணம் முழுதும் 'மாடசாமி'யைப்பற்றி ஒரே பேச்சாக இருந்தது. மாடசாமியைப் பிடித்து சிறையில் அடைத்திருக்கிறர்கள் என ஒருநாள் அறிவித்தனர் போலிசார். ஆனல் மறுநாளே கைதியாக்கப்பட்டது 'மாடசாமி' அல்ல என்றும், பாதையோரத்தில் பழைய புத்தகம் விற்பவன் என்றும் அறிவித்தார்கள். அவன்மீது குற்றம் எதுவும் மெய்ப்பிக்க முடியாமல் ஐந்தாண்டு சிறைவாசத்திற்குப்பிறகு அவன் விடுவிக்கப்பட்டான். ஆனல் மாடசாமி மட்டும் அகப்படவேயில்லை. பட்டணத்துப் பாட்டி வீட்டில் இரண்டாம் முறையாக சில வெள்ளிப் பாத்திரங்கள் களவுபோயின. பாட்டிக்கு இரவெல்லாம் தூக்கமின்றி 'மாடசாமி' அவளைத் துன்புறுத்திவந்தான்! இதனல் பீதியடைந்திருந்த பொதுமக்களைக் காக்கும்பொருட்டு, போலிஸ் சட்டத்தின் துணையுடன் சந்துபொந்துகள் விடாமல் 'மாடசாமி'க்காகத் தேடியலைந்தது. பொதுமக்களும் மாடசாமியைக் கண்டுபிடிப்பதில் முனைந்தனர். அவர்களில் கற்பனைத் திறன்படைத்தோர் சிலர் அவனைச் சிலபல இடங்களில் பார்த்ததாக மட்டுமே கூறினர்கள். இதன் விளைவாக பட்டணத்தில் ஒரே நேரத்தில் பல இடங்களில் பலரால் சந்திக்கப்பட்டான் 'மாடசாமி'. சினிமாக் கொட்டகை, பீச், மூர்மார்க்கட், மவுண்ட்ரோடு, சைனபஜார், மாம்பலம் முதலிய பல இடங்களில் பலரால் ஒரே நேரத்தில் சந்திக்கப்பட்டான்.

மாடசாமியை திருட்டு, கொள்ளை முதலான குற்றங்களுடன் விட்டுவைக்க விரும்பாமல், வேறுபல வெறுக்கத்தக்க குணங்களையும் அவனுக்குக் கற்பித்தனர். கடவுட் காதைகளில் வரும் கற்பனைக் கதாநாயகன்போல் நினைத்த நேரத்தில் விரும்பிய இடங்களுக்குச் செல்லும் திறமையும், சற்றும் எதிர்பாராத இடத்தில் திடீரென்று தோன்றி யாரும் அறியாமல் மறையும் திறமையையும் மக்கள் அவனுக்குக் கற்பித்தனர். 'மாடசாமி'—உருவமற்ற இந்த அரூபி—பட்டணத்து மக்களின் அமைதியைக் குலைத்து, பயத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தான்.

தோட்டத்து மாங்காய்கள் அதைத் தொடர்ந்து பல வெள்ளிச்சாமான்கள். பாட்டிக்குப் பயம் அதிகரித்தது, தன் உயிரையே வாங்கிவிடுவான் என அஞ்சிக்கொண்டிருந்தாள். வாரம் ஒருமுறை பூட்டுக்களை மாற்றினள். மனம் என்ன பூட்டா அதை மாற்ற? மாடசாமி மூடிய கதவுகளுக்கிடையே புகுந்து கொள்ளையும், கொலையும் செய்யக்கூடியவன் என நினைத்து பயந்தாள் பாட்டி. இந்த பயத்தை அதிகரிப்பதுபோல ஒரு நிகழ்ச்சி நடந்தது அவள் வீட்டில். அவள் வீட்டு சமையல்காரி செண்பகம். பெண்கள் குலத்திற்கே ஒரு அவமானச் சின்னமாகத் தோன்றியதுபோல இருந்தது. அவளது முகம் அழகுதான் இல்லை என்றுல் கவர்ச்சிகூடவா, இருக்கக்கூடாது. பாவம்! அவளை பார்ப்பதற்குக்கூடபயந்தனர் பலர். அப்பேர்ப்பட்ட அழகி கற்பழிக்கப்பட்டாள் என்பது யாருக்கும் தெரியாமல் நீண்டநாட்களாக இருந்தது. ஆனல் அவமானச் சின்னம் அடிவயிற்றில் உருவாகும்பொழுது அதை எப்படி மறைப்பது. பாட்டி நயந்தும், பயந்தும், மிரட்டியும், தட்டிக்கொடுத்தும் எவ்வளவோ கேட்டாள். உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவன் யார் எனச் சொல். அவனை உனக்கு மணம்முடித்து வைக்கிறேன் அல்லது தக்கபடி தண்டிக்கச் செய்கிறேன் என்றுள். ஏமாற்றப்பட்டோம் என்ற உணர்ச்சி, அவனை என்ன செய்வார்களோ என்ற பயம். பாவம் செண்பகம் கடைசிவரைப் பிடிவாதமாக இருந்துவிட்டாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் 'பொலபொல'வென வழிந்தோடியது. ஆனல் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவே இல்லை. பார்த்தாள் பாட்டி வீட்டு வேலைக்காரர்களை எல்லாம் ஒவ்வொருவராகக் கூப்பிட்டு

717

விசாரித்தாள். செண்பகத்தின் உறவினர்கள், நண்பர்கள் முதலிய எல்லோரையும் கேட்டாள். கடைசியாக செண்பகத்தை அழைத்து எனக்கு யார் என்று தெரியும், மாடசாமி தானே உன்னைக்கெடுத்தான் என்று அதட்டினாள். இந்தப் பெயரைக் கேட்டதும் 'கோ' வென்று கதறி அழுதாள் செண்பகம் இதிலிருந்து மாடசாமிதான் அவளை ஆசைகாட்டி மோசம் செய்தவன் என முடிவுகட்டினாள். செண்பகத்திற்குப் பிறந்த குழந்தைக்குத் தகப்பனாக மாடசாமி ஆனான், காதல், வீரம் இவை இரண்டும் கலந்த 'காமெடிக்' கதையின் கதாநாயகன்போல விளங்கினான் மாடசாமி. இதைப்போலவே, அந்த ஆண்டில் பிறந்த ஹோட்டல்கார அய்யரின் மகள் குழந்தை, ரொட்டிக்கடையில் வேலைபார்க்கும் பெண்ணின் குழந்தை இவர்களுக்கெல்லாம் பெறாத தகப்பனாக இருந்தான் மாடசாமி!

பட்டணத்திலும், சுற்றுப்புறங்களிலும் வாழ்ந்தபோதிலும், மாடசாமி எத்தனையோ வழிகளில் எங்கள் வீட்டுடன் அதிக உறவு கொண்டவனாக இருந்தான். எங்கள் வீட்டு வாசலில் நுழைவான். எங்கள் தோட்டச் சுவரின்மீது ஏறிக் குதித்ததாகவும் நம்பப்பட்டான். இதுவரை யாரும் அவனை நேருக்கு நேராகப் பார்த்ததில்லை. ஆனால் அடிக்கடி அவன் குரலையோ, நடந்துசென்ற பாதையையோ, அல்லது அவன் நிழலையோ பார்த்ததாகப் பேசிக்கொள்வார்கள். நிலவொளியில் எங்கள் தெருமுனையில் அவன் திரும்பிப் போவதைப் பார்த்ததாக இரண்டொரு முறை நாங்கள்கூட நினைத்தோம். எனக்கும் அன்னத்திற்கும் மாத்திரம் அவனைப்பற்றிய மாறான சில எண்ணங்கள் உண்டு. மிகவும் சிறுபிள்ளையாக ஆகிவிட்டபின் மாடசாமி, உண்மை உலகிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகி கற்பனைத்திறனகொண்டு உணர்ச்சிக் காவியம் படைக்கும் கவிகளின் கவிதைகளில் வருபவனாகவே தோன்றினான். சின்னஞ்சிறு குழந்தைகளின் கள்ளங்கபடமற்ற, இனம் தெரியாத, எத்தனையோ கற்பனைகளில் ஒருவனாகத் தோன்றினான். ஆனால் இரவு படுக்கைக்குப் போகுமுன்பு உச்சி முகட்டில் 'டொக் டொக்' என்று சப்தமிடும் பல்லியின் குரலிலும், நடு இரவில் அயலாரைக் கண்டு குரைக்கும் நாயின் குரலிலும், குடித்துவிட்டுக் கூத்தாடும் நடுத்தெரு ராஜாக்கள் குரலிலும் மாடசாமியை நாங்கள் கண்டோம். நம்மைச் சுற்றிலும் நடக்கும் எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கு காரணமாக மாடசாமியைக் கருதுவதால்தான் நாங்கள் அடிக்கடி அவனைப்பற்றிப் பேசவும் நினைக்கவும் செய்தோம். இந்தத் தொடர்பு காரணமாக அவன் எங்களுக்கு நெருங்கிய பழக்கமுள்ளவனாக ஆனான். ஏற்கனவே உள்ள புராணங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பதனாலோ என்னவோ இன்னும் 'மாடசாமி' புராணம் எழுதப்படவில்லை. இல்லாவிட்டால் என்ன, இன்றுகூட முழுமுதற் கடவுளாக இல்லாவிட்டாலும், அவனும் ஒரு கடவுளாகவே கருதப்படுகிறான்.

மாடசாமியைப் பற்றித் தெரிந்த என் தந்தை—பொதுமக்களின் நிலைகண்டு இரங்கினார். அவர்களின் தவறைக்கண்டு என் தந்தை வேதாந்திபோல சிரித்தார். ஆனால் அவர்கள் தவறினால் தொல்லைகள் அதிகம் இருந்தால் அதைக் களையவே முற்படுவார். பொதுமக்கள் 'மாடசாமி' யைப் பற்றி கொண்டிருக்கும் நம்பிக்கை, பொதுமக்களின் நம்பிக்கைகளுக்கு பொழிப்புரையாக (சுருக்க விளக்கமாக) இருந்தது. நம்பிக்கை என்பது ஒரு நச்சுப்பொருள் இதை உண்டவர்கள் மீளாத உறக்கத்தினின்றும் விழித்ததில்லை. நச்சு உடலெல்லாம் பரவுமுன் தகுந்த மருத்துவ கிகிச்சை பெற்றால் உயிர்மீள வாய்ப்பு உண்டு. இந்தப் பகுத்தறிவு மருத்துவம் பலருக்குப் பிடிப்பதில்லை. என் தந்தை தன் முயற்சியைத் தொடர்ந்து நடத்தியிருக்கலாம். ஆனால் அவர் மக்களின் இந்த பயங்கர நம்பிக்கையைக் கண்டு எள்ளி நகையாடி எக்காளமிடுவதுடன் நிறுத்திக்கொண்டார். இந்த வேதாந்தப்போக்கு காரணமாக என் தந்தையும் 'மாடசாமி' உயிருடன் உலவுவதுபோல ஒத்துக்கொண்டு பேசுகிறார். என் அம்மாகூட அடிக்கடி என் தந்தை கூறுவதைக் கேட்டு, மக்களின் நம்பிக்கை பலப்படும் என்று எச்சரித்தாள். வேதாந்தத்தின் உச்சநிலையில் நின்றுகொண்டு பட்டணம் முழுவதும் 'மாடசாமி'யின் உயிராற்றலின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறது. நான்மட்டும் அதை மறுக்கமலா? பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு பொருளை அழிப்பதற்கு அதிக அவகாசம் தேவை என்று கூறுவார்.

'மாடசாமி'யின் உயிராற்றலை வேண்டுமானால் ஒத்துக்கொள்வார். ஆனால் ஊரில் நடக்கும் திருட்டுக்கும், விபசாரத்திற்கும் அவன் காரணம் என்பதை ஒத்துக்கொள்ள மாட்டார் என் தந்தை. கம்பன் கற்பனையில் உதித்த அரக்கர்களுக்கும் ஷேக்ஸ்பியர் கற்பனையில் உதித்த பக் என்றவனுக்கும், என் தாயின் கள்ளமற்ற கற்பனையில் உதித்த மாடசாமிக்கும் அதிகம் வேறுபாடு கிடை-

மகிழ்ந்து அணைத்த மங்கை

[எழினி]

போர் முடிந்து, வெற்றி ஏற்பட்டு, அமைதி நிலவத்தொடங்கிவிட்டபடியால், காதலனாகிய படைத்தலைவன், தன் அருமைக் காதலியைக் காணவேண்டித், தன் ஊர் திரும்புவதற்கான ஆயத்தங்களைச் செய்கிறான்.

அதற்குள் கார்காலமும் நெருங்கிவிடுகிறது' பல ஆண்டுகளாகப் பெய்யாதிருந்த மழையும் பெருமழையாகச் சோவெனப் பெய்துவிடுகிறது. தலைமழை பெய்துவிட்டதைக் கண்ட காதலன், " மழை பெய்வதானது, கார்காலம் முன்னரே துவங்கிவிட்டது என்பதைக் காட்டுகிறது. நாமோ கார்காலம் துவங்குவதற்கு முன்னரே வந்துவிடுவோம் என்று தலைவியிடம் சொல்லிவிட்டு வந்துள்ளோம். இனி ஒருநொடியும் காலந்தாழ்த்தினால் தலைவி பெரிதும் வருந்தித் துன்பமுறுவாள். எனவே உடனே புறப்படுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் நாம் செய்யவேண்டும் " என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு பயணத்திற்கு ஆயத்தப்படுகிறான்.

அரசனிடத்திலும், பிற படைத்தலைவர்களிடத்திலும், போர்வீரர்களிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு, விரைந்து செல்லக்கூடிய குதிரைகள் பூட்டிய தேரையும், மிக்க திறமையாக ஓட்டிச் செல்லக்கூடிய பாகனையும் அமர்த்திக்கொண்டு புறப்படுகிறான்.

தேர், மிக விரைவாகத் தலைவனின் ஊர் நோக்கி செல்லுகிறது. ஊர் நெருங்க நெருங்க "தேர் இன்னும் விரைவாகச் செல்லக் கூடாதா......" என்று தலைவன் தன் மனதிற்குள்ளே எண்ணிக்கொள்கிறான்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு பெருமழை பெய்துள்ளதால், ஆறுகள், ஏரிகள், குளங்கள், குட்டைகள், பள்ளங்கள், படுகுழிகள் எல்லாம் நீர் நிரம்பிக்கிடக்கின்றன. தேரோடும் வழியெல்லாம் சேறும் சகதியுமாகக் கிடக்கின்றன. கார்காலத்துக் குளிரையும், நீர்த்தேக்கங்களையும் கண்ட தவளைகளெல்லாம் வழிநெடுகப் பேரொலி எழுப்பத் துவங்கிவிடுகின்றன. தேரில் கட்டியுள்ள மணிகளின் ஒலியை மறைக்கும் அளவுக்குத் தவளைகளின் ஒலி பேரிரைச்சலாக இருக்கிறது. தவளைகளின் இரைச்சல் காரணமாகத், தன்தேரின் மணியொலி, தலைவிக்கு முன்கூட்டியே கேட்குமோ அல்லது கேட்காதோ, தன் வருகையை அவள் முன்கூட்டியே அறிந்துகொள்ளுவாளோ அல்லது அறியாமற் போய்விடுவாளோ என்று ஐயப்பட்டுக்கொண்டு, உடன் குதிரை ஏறிவரும் வீரர்கள் இருவரை விளித்து, " நீங்கள் இருவரும் விரைவாகச் சென்று நான் பின்னால் வந்துகொண்டிருக்கிறேன் என்பதை முன்கூட்டியே தலைவியிடம் அறிவியுங்கள் !" என்று சொல்லியனுப்புகிறான். அந்த இரண்டு குதிரைவீரர்களும் காற்றெனப் பறந்து செல்கிறார்கள். பின் தலைவன் தேர்ப்பாகனோடு உரையாடிக்கொண்டே போகிறான்.

தலைவன் : " பாகனே ! தேரை விரைவாகச் செலுத்து பார்க்கலாம் !"

யாது. வேண்டா வெறுப்பாகத் தன் வாயிலிருந்து வெளிவந்த ஒரு சொல் ஊர் முழுதும் கலக்கி, உலகை ஆட்டிப் படைக்கும் பெரும் சக்திபடைத்த 'மாடசாமி'யாக வளர்வதைக் கண்டு, அவன் பிறப்பிற்குக் காரணமான என் தாய் இன்றைக்கும் தன்னைத்தானே நொந்துகொண்டிருக்கிறாள். என் பொய்யில் பிறந்தவன்தான் 'மாடசாமி' என்ற உண்மையை என் தாய் எடுத்துச்சொன்னால், இவளுக்குப் பைத்தியம் பிடித்துக்கொண்டது. அதற்குக் காரணம் 'மாடசாமி' என்று மக்கள் கூறாமல் விடுவார்களா ?

[பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த புகழ்பெற்ற எழுத்தாளர் அனத்தேல் பிரான்ச்சு என்பவர் எழுதிய சிந்தனையைத்தூண்டும் சிறுகதையை செல்வன் தமிழில் தழுவி எழுதியுள்ளார்.]

பாகன் : "இவ்வளவு விரைவுபடுத்தி ஓட்டுகிறேனே, போதாதா ?"

தலைவன் : "இன்னும் விரைவாகச் செலுத்த முடியாதா ?"

பாகன் : "எப்படிச் செலுத்துவது ? முடிந்தால் நான் செலுத்தாமல் இருப்பேனா ?"

தலைவன் : "தார்க்குச்சியால் குத்திச் சாட்டையால் சுழற்றி அடித்து ஓட்டிப்பாரேன் !"

பாகன் : "நாம் எவ்வளவு குத்தினாலும், எவ்வளவு அடித்தாலும் குதிரைகள் ஓடமுடிந்த அளவுக்குத்தானே ஓடும் ?"

தலைவன் : "என் மனநிலை எப்படியிருக்கிறது என்பதை நீ அறியமாட்டாய், பாகனே !"

பாகன் : "தாங்கள்தான் முன்னரே செய்தி சொல்லி அனுப்பிவிட்டீர்களே ! இன்னமும் ஏன் விரைவுப்படுத்துகிறீர்கள் ?"

தலைவன் : "அந்தக் காட்சியைக் காணவேண்டுமென்று என் மனம் எவ்வளவு துடிதுடிக்கிறது தெரியுமா ?"

பாகன் : "எந்தக் காட்சியைக் காண......?"

தலைவன் : "நான் மாளிகை சென்று சேர்ந்ததும், என் மனைவி வரவேற்கப்போகும் காட்சியைத்தான் சொல்லுகிறேன் !"

பாகன் : "தாங்கள் எப்படிப்பட்ட வரவேற்பை எண்ணி எப்படிக் கனவுகண்டுகொண்டிருக்கிறீர்களோ......? தலைவியார் எப்படிப்பட்ட வரவேற்பை அளிக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்களோ......? இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாக அமைந்துவிட்டால்......!"

தலைவன் : "நீ அப்படி ஒன்றும் நினைக்காதே ! அவள் என்னிடத்தில் என்றென்றும் அன்புடையவளாகத்தான் இருப்பாள். அவள் என்பால் கொண்டுள்ள அன்பு வற்றாது வாடாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். சென்ற முறை நான் போருக்குச் சென்றுவிட்டுத் திரும்பி வந்தபோது, அவள் அளித்த வரவேற்பையும், காட்டிய அன்பையும் கண்கூடாகக் கண்டேனே !"

பாகன் : "சென்றமுறை தலைவியார் எப்படிப்பட்ட வரவேற்பைத் தங்களுக்கு அளித்தார்கள் ?"

தலைவன் : "இப்பொழுதைப் போலவேதான், அப்பொழுதும், நான் செல்வதற்கு முன்னால், குதிரைவீரர்களை விரைவாகச் சென்று நான் வரும் செய்தியைத் தலைவிக்கு அறிவிக்கும்படி ஏற்பாடு செய்தேன். குதிரைவீரர்கள் சென்று செய்தியைச் சொல்லும்போது, தலைவி என்னைப் பிரிந்திருந்த வருத்தத்தால் சரிவர நீராடாமல், நல்ல ஆடை அணிகலன்கள் அணிந்துகொள்ளாமல், பின்னி முடியாத—பூச்சொருகாத கூந்தலையுடையவளாய்க் காட்சியளித்தாளாம். நான் வரப்போகிறேன் என்ற செய்தியைக் கேள்வியுற்றவுடன் அவள் தூய நீரில் நீராடிக், கூந்தலிலிருந்த அழுக்குகளைப் போக்கிச் சிக்கல் எடுத்து, அதனைச் சீவி அழகுபடுத்தி, அதில் மலர்களை வைத்து முடிக்குந் தறுவாயில் நான் போய்ச்சேர்ந்தேன். நான் உள்ளே நுழைந்ததும், அவள் கூந்தலை முடிகின்ற வேலையை அப்படியே விட்டுவிட்டு, கூந்தல் அவிழ்ந்து சரியும் நிலையில் உடலானது கொடிபோல் துவண்டு அசைய, ஓடிவந்து என்னைக் கட்டி அணைத்துக்கொண்டாள். அவள் அவ்வளவு மகிழ்ச்சியை என்னிடத்தில் காட்டிக்கொண்டாள். அவள் மகிழ்ந்து கொண்டாடும் அந்தத் தன்மையை நான் என்றென்றும் மறக்கமுடியாது. அப்படி மகிழ்ந்தணைக்குந் தன்மையை நான் இன்றும் பெறுமாறு, நீ விரைவாகத் தேரைச் செலுத்துவாயாக !"

தலைவனின் ஆர்வத்தை அறிந்துகொண்ட பாகன் தேரை மேலும் விரைவாகச் செலுத்த முற்படுகிறான். தேர்க்குதிரைகள் நாலுகால் பாய்ச்சலில் பாய்ந்துவந்து சிறிதுபொழுதிற்கெல்லாம் தலைவனின் மாளிகைக்கு எதிரே வந்து நிற்கிறது. தலைவன் எதிர்பார்த்தவண்ணம் தலைவி வரவேற்பு அளிக்கிறாள் !

ஃ ஃ ஃ

மேலே காட்டப்பட்டிருக்கும் காதற்காட்சி நற்றிணை **42**-ஆம் செய்யுளின் கருத்தை உள்ளடக்கியதாகும். இந்தச் செய்யுளை இயற்றிவர் கீரத்தனார் என்ற புலவராவார். இவர் குடவாயிற் கீரத்தனார் என்றும் அழைக்கப்படுவார். குடவாயில் என்னும் பேரூர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நன்னிலம் வட்டத்தில் இருக்கிறது. அந்தக்காலத்தில் சோழரது பணச்சாலை குடவாயிலில் இருந்ததாக அகநானூறு 60-ஆம் செய்யுளில் இவர் குறிப்பிட்டுள்ளார். இந்தக் குடவாயிலில்தான் பணச்சாலையோடு சிறைச்சாலையும் பண்டைச் சோழர்கள் வைத்திருந்தார்கள் என்று தெரியவருகிறது. சோழன் செங்கணான், கணைக்காலிரும்பொறை என்ற சேர மன்னனைப் போரில் தோற்கடித்து,

அவனைப் பற்றிவந்து, குடவாயிற்கோட்டத்துச் சிறையில் அடைத்தான் என்று 'களவழி'யிலும், 'புறநானூற்'றிலும் சொல்லப்பட்டுள்ளது இங்குக் கவனிக்கத் தக்கதாகும். வள்ளல்கள் நன்னனும், எவ்வியும் இவரால் சிறப்பித்துப் பாராட்டப்பட்டுள்ளனர். இவர் உறையூரையும், காவிரியையும் பாடியுள்ளார். இவர் பாடிய பாட்டுக்கள் நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை ஆகிய நூல்களில் காணப்படுகின்றன.

மறத்தற்(கு) அரிதால் பாக! பன்னாள்
அறத்தொடு பொருந்திய உலகுதொழில் கொளீஇய
பழமழை பொழிந்த புதுநீர் அவல
நாநவில் பல்கிளை கறங்க நாவுடை
மணியொலி கேளாள் வாணுதல் அதனால்
ஏகுமின் என்ற இளையர் வல்லே
இல்புக்(கு) அறியுநராக மெல்லென
மண்ணாக் கூந்தல் மாசறக் கழீஇச்
சில்போது கொண்டு பல்குரல் அழுத்திய
அந்நிலை புகுதலின் மெய்வருத் துறாஅ
அவிழ்பூ முடியினள் கவைஇய
மடமா அரிவை மகிழ்ந்தயர் நிலையே.



[நற்றிணை—42]

[பொழிப்புரை : தேர்ப்பாகனே! நீரில்லாமையாலே கோடைக்காலத்தில் பலநாட்களாக வறட்சியடைந்திருந்த உலகத்து உயிரினங்கள், மகிழ்ச்சியோடு தத்தம் தொழிலை மேற்கொண்டு நிகழ்த்தும்படி தொன்றுதொட்டுப் பெய்யும் வழக்கம்போல மழைபெய்ததனால் ஏற்பட்ட புதிய நீர் நிரம்பிய பள்ளங்கள்தோறும் நாவினால் ஒலிக்கின்ற பலவாகிய கூட்டத்தையுடைய தவளைகள் இரைச்சல் இடுதலாலே, நாம் செல்லுகின்ற தேரிற் கட்டிய நாக்கினையுடைய மணிகளின் ஒலியை ஒளிபொருந்திய நெற்றியையுடைய நமது தலைவி கேட்டறியமாட்டாள்; ஆகையாலே நீவிர் முன்னே சென்று சொல்லுவீர் என்றதற்கொப்ப அக்கட்டளையை ஏற்ற வேலைக்காரர்கள் விரைந்து நமது மாளிகையில் புகுந்து அறிவித்தனராக, உடனே மெல்ல அதுகாறும் சீவி அழகுப்படுத்தாத கூந்தலின் அழுக்குப்போகத் தூய நீராடி சிலவாகிய மலர்களைக்கொண்டு பலவாகிய கூந்தலிலே முடிக்கின்ற அந்தத்தறுவாயில், நான் உள்ளே புகுதலும் என்னை நோக்கித் தன் உடன் துவளும்படி வந்து அவிழ்ந்து குலையும் கூந்தலையுடையவளாய் என்னை அணைத்துக்கொண்ட மடப்பத்தையுடைய சிறந்த நமது தலைவி மகிழ்ந்துகொண்டாடுந்தன்மை நான் மறப்பதற்கு அரியதாகும்; அத்தகையவள் இன்னும் மகிழ்ந்தணைக்குமாறு விரைவிலே தேரைச் செலுத்துவாயாக!

உலகு - உயிர்; கொளீஇய - கொண்டு, மேற்கொண்டு; அவல் - பள்ளம்; வாள் - ஒளி பொருந்திய; நுதல் - நெற்றி; இளையர் - வேலைக்காரர்; குரல் - கூந்தல்; மண்ணாக்கூந்தல் - நீராட்டாத கூந்தல்; கவைஇய - அணைத்த.]

காதலியை விட்டுப் பிரிந்திருந்த காதலன் மீண்டும் அவளைக் காணவேண்டும் என்று திரும்பும்போது எவ்வளவு மனத்துடிப்புக் கொண்டவனாக இருப்பான் என்பதை இப் பாடல் இனியமுறையில் எடுத்துக் கூறுகிறது.

காதலன், தான் திரும்பிவரும்போது தன்னைத் தலைவி எதிர்பார்த்திருக்கவேண்டும் என்று விரும்புகிறான். தேரின் மணியொலி கேட்டுத் தலைவி தலைவனை எதிர்பார்த்திருக்கலாம் என்றாலோ, தவளைகளின் இரைச்சல் அந்த ஒலியை மறைத்துவிடுகிறது. எனவே தான் வேலைக்காரர்களாகிய குதிரை வீரர்களை முன்கூட்டியே அனுப்பித் தன்னைத் தலைவி எதிர்பார்த்திருக்கும்படியான நிலையைத் தலைவன் உண்டாக்குகிறான். இதிலிருந்து தலைவனின் உளப்பாங்கு எவ்வளவு துடிதுடிப்புக் கொண்டதாக இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

நீராட்டி மாசுபோக்கப்படாத கூந்தலையுடையவளாகத் தலைவி இருந்தாள் என்பதிலிருந்து, தலைவி காத்துவந்த கற்பின் தன்மையை உணரலாம், கற்புடைய மகளிர் தம்முடைய அழகைத் தம் கணவன்மார் கண்டு களிக்கவேண்டும் என்று எண்ணுவார்களே ஒழிய, பிறர் கண்டுகளித்துத் தம்மீது விருப் முற இடங்கொடுக்கமாட்டார்களாதலால், இ தத் தலைவியும் தன் கற்பினை நிலைநாட்ட தன்னைப்புனைந்துகொள்ளாமல் இருந்தாள் என்று நயம்படக் கூறப்பட்டுள்ளது.

தலைவி தலைவனைக் கண்டதும் முடியும் கூ தலை அப்படியே விட்டுவிட்டுத் தள்ளாடி நடந்துவந்து தலைவனைக் கட்டி அணைத்துக் கொண்டாள் என்பதிலிருந்து பிரிவுக்காலத் தில் தலைவி தலைவனை நினைந்து எவ்வளவு ஏக்கமுற்றிருந்திருக்கிறாள் என்ப தையும், தலைவனிடம் எவ்வளவு தணியாக் காதல்கொண்டிருந்திருக்கிறாள் என்பதையும் நன்கு தெரிந்துகொள்ளலாம்.

தேரில் மணிகட்டி ஓட்டும் பழக்கம் இருந்து வந்திருப்பது இச்செய்யுளால் உணரப்படும்.

மழை பெய்தவுடன் தவளைகள் கூட்டங் கூட்டமாக இருந்து இரைச்சல்போடும் இயற்கை நிகழ்ச்சியும், நீண்டகால வறட்சியை நீக்கிடும் மழை பெய்தால் மக்கள் அதனை மகிழ்ச்சியோடு வரவேற்றுத் தத்தம் தொழி லிலே நாட்டம் செலுத்தும் தன்மையும் இச் செய்யுளில் இனிது கூறப்பட்டிருக்கின்றன.

●●

தாழ்வு நீக்கி வாழ

பிராமணப் புரோகிதர்களும் பூசாரிகளும் பிராமணரல்லாதார்களுடைய பொருள்களைக் கவருவதற்காக தொன்றுதொட்டுச் செய்துவரும் சூழ்ச்சிகளையும். மோசங்களையும், கொலைகளையும் பிற தீய செயல்களையும் எடுத்துக் கூறவேண்டும். இந்து சமயம் என்பதன் பொய்களையும், புரட்டுக்களையும், ஆபாசங்களையும், அச்சமயப் பெயரால் செய்யப்படும் சடங்குகளின் வாயிலாகப் பிராமணரல்லாதார்களின் பொருள்கள் கொள்ளையிடப்படுவதையும், பிராமணரல்லாதார்கள் தாழ்த்தப்படுவதையும், அக்கொள்ளைகளினின்றும், தாழ்வினின்றும் பிராமணரல்லாதார்கள் தப்புவதற்குள்ள அவசியத்தையும் வழிகளையும் விளக்கிக் கூறவேண்டும்.

—வ. உ. சிதம்பரம் (பிள்ளை) "ஞானசூரியன்" முன்னுரை 7-10-1927.

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தங்கம் கண்ணைத் திறந்தபொழுது, எதிரில் டாக்டர் சஞ்சீவி உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அவருக்குப் பின்னால் டாக்டர் நாகசாமி, டாக்டர் ரகுநாதன் முதலானோர் நின்று பேசிக்கொண்டிருந்தனர். தங்கம் கண்ணைத் திறந்ததும், பேச்சு நின்று எல்லோருடைய கவனமும் அவள் பக்கம் சென்றது.

எங்கிருக்கிறோம்? அவளுக்குப் புரியவில்லை. தலையில் போடப்பட்ட கட்டு, முகவாயின்கீழ் அழுத்தியது, இடது கை அசைக்கமுடியாதபடி கிடந்தது. படுக்கையில் அசையமுடியவில்லை. வலது கையைத் தூக்கினாள். அதில் கூட சிறு சிறு ஒட்டுகள் போடப்பட்டிருந்தன, தூக்கமுடியாதபடி கனமாக இருந்தது.

அதுவரைக் கை நாடியைப் பார்த்துக் கொண்டிருந்த டாக்டர் சஞ்சீவி, புன்முறுவல் செய்தார், கண்களில் இருந்த கண்ணீரை மறைத்து.

"பேசாமலிரு! சரியாகிவிடும்" என்று அவர் எழுந்தார்.

எப்படி இங்கு வந்தோம்? தங்கத்திற்கு வேடிக்கையாக இருந்தது. நினைவு சரியாக இல்லை. கடைசியாக...கடைசியாக...தடால் என்று மோதும் சத்தம், தீயின் வெப்பம், புகை, அவ்வளவுதான் ஞாபகத்துக்கு வந்தன. சரிவில் கார் பள்ளத்தில் விழுந்தது கீழே பள்ளத்தில்தான் இன்னும் கிடக்கிறோம், என்று எண்ணிக்கொண்டு, தங்கம் கண்ணை மூடிக்கொண்டாள்.

அவளுடைய கையை மெதுவாகத் தூக்கி, அதன் கீழ் தலையணையை யாரோ வைத்தார்கள். தங்கம் மீண்டும் கண்விழித்துப் பார்த்தாள். ஆஸ்பத்திரி நர்சின் வெள்ளை யாடை தெரிந்தது.

"ரகுராமன்! வா போகலாம்!" என்று டாக்டர் சஞ்சீவி அழைக்கும் குரல் கேட்டது.

பின் தங்கம் நன்றாகப் பார்த்தாள். மேலே இருந்த கூரை, பலகணி, வெளியிலிருந்த மரம், மருந்துகளின் நாற்றம், எல்லாம் ஆஸ்பத்திரியில் இருப்பதை அவளுக்கு வலியுறுத்தின. காரிலிருந்து கீழே விழுந்ததும், இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறோம் என்ற எண்ணம் அவளுக்கு சிறிது சிறிதாகக் கூடி வந்தது.

தங்கத்தின் நினைவு மேலும் சிறிது தெளிவடைந்தது. பாதையில் அவள் எடுத்துச் சென்ற கார், அடங்காமல் வீரிட்டு, வழியை விட்டு கீழே மோதியது ஞாபகத்திற்கு வந்தது. அப்படியானால், அவர்—கமலநாதன், அவருக்கு என்னவாயிற்று?—அவரும் பின்தொடர்ந்து வந்து—காரைப்பிடித்து நிறுத்த—காருடன் கீழே தள்ளப்பட்டு—இறந்து—ஐயோ...!

அவள் நினைத்ததில் கடைசியாக இருந்தது மட்டும் "ஐயோ" என்று கூச்சலாகக் கேட்டது. அந்த அறையை விட்டு வெளியேறிய டாக்டர்கள் திரும்ப வந்தார்கள் தங்கம் மயக்கம்போட்டு இருந்தாள்.

"என்ன நடந்தது?" என்று டாக்டர் சஞ்சீவி சத்தமிட்டார். படுக்கைக்குப் பக்கத்திலிருந்த இரண்டு நர்சுகளும் நடுங்கிவிட்டார்கள். "நாங்கள் ஒன்றும் செய்யவில்லை. டாக்டர் சிறிதுநேரம் கண்ணை விழித்துச் சுற்றிலும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பின் திடீரென்று 'ஐயோ!' வென்று கூச்சலிட்டார்கள். அவ்வளவுதான் நடந்தது."

டாக்டர் சஞ்சீவிக்கு அவர்கள்மீது நம்பிக்கையில்லை.' பக்கத்தில் உட்கார்ந்து, தங்கத்தின் நாடியைப் பார்த்தார். மிக வேகமாக அடித்துக்கொண்டிருந்தது.

"வேகமாக இருக்கிறது!" என்று அவர் டாக்டர் ரகுராமனைப் பார்த்தார்.

"மிக நீண்ட கஷ்டமான ஆப்ரேஷன், அதிலிருந்து வந்த களைப்பு, அந்த நிலையில் விபத்து ஏற்பட்டது ஞாபகத்துக்கு வந்திருக்கும். இன்று இரவு நிம்மதியாகத் தூங்கினால் காலையில் நன்றாக இருக்கும். இன்னும் ஒரு மணிநேரம் கழித்து, ஒரு மார்பியா இன்ஜெக்‌ஷன் கொடுத்தால் போதும்." என்று டாக்டர் ரகுராமன் சொன்னார்.

சிறிதுநேரம் உட்கார்ந்திருந்ததும், டாக்டர் சஞ்சீவி எழுந்தார். "நான் லைப்ரரியில் உட்கார்த்திருப்பேன். ஏதாவது வேண்டுமானால் கூப்பிடுங்கள்!" என்று சொல்லிவிட்டுச் சென்றார். அவரைப் பின்தொடர்ந்து டாக்டர் ரகுராமனும் சென்றார்.

டாக்டர் சஞ்சீவியும், டாக்டர் ரகுராமனும் ஒன்றாகச் செல்வது ஆஸ்பத்திரியில் பலருக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணியது. கடந்த இருபது ஆண்டுகளாக இருவரும் அந்த ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கின்றனர். மருத்துவப் பகுதியில் டாக்டர் சஞ்சீவி முதன்மையாளராக இருந்ததைப்போல, ரணசிகிச்சைப் பகுதியில் டாக்டர் ரகுராமன் முதன்மையாளராக இருந்தார். ஒருவரைக் கண்டால் மற்றவருக்குப் பிடிக்காது. ரணசிகிச்சை என்றால், "அது கசாப்புக்கடைவேலை" என்று டாக்டர் ரகுராமன் காதில் விழும்படி சொல்வதில் டாக்டர் சஞ்சீவிக்குத் தனித் திருப்தி. மருத்துவப் பகுதியில் பரிசோதிக்கப்பட்டு, ரணசிகிச்சைக்கு நோயாளிகள் யாராவது வந்தால், "ரணசிகிச்சைக்கு நேராக வந்திருக்கவேண்டிய கேஸ். இது ஏன் மருத்துவப்பகுதியில் விளையாட்டுக்காக வைத்துக்கொள்ளப்பட்டது" என்று தன்னுடன் வரும் உதவி டாக்டர்களிடம் சொல்ல டாக்டர் ரகுராமன் தயங்குவதில்லை. ஆஸ்பத்திரி வார்டுகளைச் சுற்றிப் பார்த்துவரும்பொழுது இருவரும் சந்திக்க நேரிட்டால், "அவர்களுடைய கண்களில் பொறிபறப்பதைப் பார்க்கலாம்!" என்று மாணவர்கள் பேசிக்கொள்வார்கள். அவர்களிடை ஏற்பட்ட பிளவு, ஆஸ்பத்திரி முழுவதும் வகுப்பு அறையிலிருந்து ஆசிரியர்களின் கூட்டம்வரை பரவியிருந்தது. டாக்டர் சஞ்சீவி ஏதாவது சொன்னால், டாக்டர் ரகுராமன் அதை மறுக்காமல் இருக்கமாட்டார். டாக்டர் ரகுராமன் பேச ஆரம்பிக்கும்பொழுதே அதைக் குறைகூறியோ, மறுத்தோ பேச டாக்டர் சஞ்சீவி தயார் செய்துகொள்வார். அவர்கள் போட்டுக்கொள்ளும் சண்டை, அவர்களுடைய தொழிலில்—மற்றவகையில் அமைதியாக இருந்த வாழ்வில் ஒருவகைத் தனி உற்சாகத்தைக் கொடுத்தது. ஆஸ்பத்திரியில் ஏதாவது வேலை காலியாகிறதென்றால், இரண்டுபேரும் வெவ்வேறு பெயர்களைச் சிபாரிசு செய்வார்கள். தம்முடைய முழுசெல்வாக்கையும் உபயோகப்படுத்தி, இருவரும் பாடுபடுவார்கள். தன்னுடைய ஆள் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், உடனே சண்டை போட ஆரம்பித்துவிடுவார்கள். மணல்வீடு கட்டி விளையாடும் சிறுவர்களுக்குள் ஏற்படும் சண்டைகளைப்போலத்தான் இருக்கும் இந்த வயதான டாக்டர்களுக்குள் ஏற்படும் சண்டைகள்.

ஆஸ்பத்திரிக்குள் எவ்வளவு சண்டைகள் இருந்தபோதிலும், தனிப்பட்ட முறையில் ஒருவரைத் தாக்கி மற்றொருவர் பேசிக்கொள்வதில்லை. டாக்டர் சஞ்சீவியின் பெருமையைப் பற்றி டாக்டர் ரகுராமன் உயர்வாகவே பேசுவார். ரணசிகிச்சை வேண்டி யாராவது வந்தால், "டாக்டர் ரகுராமனைவிடச் சிறந்த ரணசிகிச்சை செய்பவர் கிடையாது என்று டாக்டர் சஞ்சீவி சொல்லி அனுப்புவார். ஒருவர் திறமையை மற்றவர் ஒப்புக்கொண்டபோதிலும், ஆஸ்பத்திரிக்குள் நுழைந்ததும் இருவரும் வெவ்வேறு முகாம்களாகிவிடுவார்கள். ஆஸ்பத்திரியில் வேலைபார்ப்பவர்களும், டாக்டர் சஞ்சீவியைச் சேர்ந்தவர்கள், டாக்டர் ரகுராமனைச் சேர்ந்தவர்கள் என்று பிரிந்திருந்தனர்.

டாக்டர் தங்கம் பலத்தகாயங்களுடன் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டதும், முதலில் டாக்டர் ரகுராமன்தான் அழைக்கப்பட்டார். தங்கத்தின் நிலைமையைப் பார்த்ததும், டாக்டர் ரகுராமன், எலும்பு முறிவு சிகிச்சையில் தேர்ச்சிபெற்ற டாக்டர் நாகசாமியை அழைத்திருந்தார். அடிபட்டு, மூர்ச்சையான நிலையிலிருப்பது டாக்டர் தங்கம் என்றதும், நாகசாமிக்கு டாக்டர் சஞ்சீவியின் ஞாபகம் வந்தது. எனவே அவர் டெலிபோன் மூலம் டாக்டர் சஞ்சீவிக்குச் செய்தியனுப்பி வரவழைத்தார். டாக்டர் சஞ்சீவி வந்தபொழுது, ஆப்ரேஷன் தியேட்டருக்குள் எல்லோரும் சென்றுவிட்டார்கள். வெளியில் மாட்டியிருந்த வெள்ளையுடைகளை மாட்டிக்கொண்டு, முகமூடியைப் போட்டுக்கொண்டு, டாக்டர் சஞ்சீவி உள் நுழைந்தார். அவர் ஆப்ரேஷன் செய்யுமிடத்

திற்கு வந்து பல ஆண்டுகளுக்கு மேலிருக்கும். அவர் மாணவனாக இருந்தபொழுது ஆப்ரேஷன் தியேட்டர்களில் நடமாடியதைத் தவிர, அதற்குப் பிறகு அவர் அதிகம் வந்ததில்லை. உள்ளே வந்ததும், மயக்க மருந்து கொடுப்பவரின் பக்கத்தில் நின்று ஆப்ரேஷன் நடப்பதை டாக்டர் சஞ்சீவி பார்த்தார். டாக்டர் நாகசாமி, ரகுராமன் இருவரும் ரண சிகிச்சை செய்வதை அவர் நீண்ட நாட்களாகப் பார்த்ததில்லை. நேரில் பார்க்கும்பொழுது தான் அவர்களுடைய வேலைத்திறமையும், வேகமும் தெரிந்தது. கத்திகளும், வெட்டுகளும் சொல்லிவைத்தாற்போல, அவர்கள் கையில் சுழன்றன. அவர்களுடைய வேகத்துடன் போட்டிபோட முடியாமல், பக்கத்தில் உதவிசெய்யும் நர்சுகள், கத்தி, கத்திரிக்கோல், முதலிய சாதனங்களை கொடுப்பதில் அவதிப்பட்டனர். இடது பக்கம் விலா வெலும்பு ஒன்று உடைந்து, உள்ளே குத்தியிருந்தது, இடதுகை முன்னெலும்பும் முறிந்திருந்தது. மற்றபடி தலையிலும், காலிலும் பட்டிருந்த காயங்கள் வெளிக்காயங்கள்தான் ஆப்ரேஷன் முடிந்து வெளிவரும்பொழுது, டாக்டர் ரகுராமனின் தோளைத் தட்டி "ரகுராமன்! திறமையான ஆப்ரேஷன்!" என்று டாக்டர் சஞ்சீவி போற்றினார். டாக்டர் ரகுராமன் "நன்றி!" என்று புன்னகை செய்தார். இதுவரைப் பரம விரோதிகளெனக் கருதப்பட்ட இரு டாக்டர்களும், ஒன்றாகப் போவதைப் பார்த்து ஆஸ்பத்திரியிலுள்ள மற்றவர்கள் ஆச்சரியமடைந்தனர்.

தங்கத்தின் அறையைவிட்டு வெளியேறியதும், டாக்டர் சஞ்சீவி நூல்நிலையத்தில் போய் உட்கார்ந்தார். புத்தகங்களைப் புரட்டினார்; ஆனால் கவனம் அவற்றில் செல்லவில்லை. அடிபட்ட காயங்களும், ரணசிகிச்சையும், அறுத்தலும், தையலும்தான் நினைவில் முன்னின்றன. மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த பொழுது இருந்ததைப்போல அவருடைய உள்ள நிலை இருந்தது. அதுவரைப் படித்தது, அதனால் ஏற்பட்ட நம்பிக்கை இப்பொழுது எங்கோ மறைந்துவிட்டன. நோயாளிகளின் உற்றார் உறவினர்கள் மிகுந்த கவலையுடன் தொந்தரவு கொடுக்கும்பொழுதெல்லாம் அவருக்குக் கோபம் வருவதுண்டு. இப்பொழுதுதான் அவர்களுடைய போக்கை அவரால் ஒருவாறு உணரமுடிந்தது. டாக்டர் சஞ்சீவி சோர்ந்த உள்ளத்துடன் உட்கார்ந்திருக்கும்பொழுது, கமலநாதன் வெளுத்த முகத்துடன் வெறித்த பார்வையுடன் வாசற்படியில் நின்றான். அவன் நீண்டநேரம் நின்று கொண்டிருக்கவேண்டும்.

"நீ இப்பொழுதுதான் வருகிறாயா?" என்று டாக்டர் சஞ்சீவி எழுந்து அருகில் வந்தார்.

கமலநாதன் தலையசைத்தான், "நான் வெளியில் சென்றிருந்தேன். திரும்பி வந்தபொழுது, வேலையாள் சொன்னான்."

"நீ தங்கத்தைப் பார்த்தாயா?"

"இன்னும் இல்லை."

திடீரென்று வந்த சோகச்செய்தி, கமலநாதனை உணர்வற்றவனாக ஆக்கிவிட்டது. என்று டாக்டர் சஞ்சீவி நினைத்தார். அவன் முகம் அசைவற்று, கடுமையாக இருந்தது. பேச்சு நிதானமாக, சத்தற்றதாக வந்தது. அவனுடைய கண்களைப் பார்க்கும்பொழுது தான் டாக்டர் சஞ்சீவிக்குப் பயமாகவே இருந்தது, கடுமையான, வெறித்த, தூரத்தைப் பார்க்கும் பார்வை—பைத்தியக்காரர்களுக்கு இருப்பதைப் போன்றது. டாக்டர் சஞ்சீவி மேல் ஏதும் பேசாமல், அவனை அழைத்துக்கொண்டுபோனார்.

தங்கம் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். தலையைச் சுற்றி கட்டப்பட்டிருந்தது, நெற்றியில் ஒரு ஒட்டு போடப்பட்டிருந்தது. மிகுந்த வேதனையால் முகத்தில் ஏற்பட்ட சோர்வு கலையாதிருந்தது.

"எப்பொழுது தூங்க ஆரம்பித்தார்கள்?" என்று டாக்டர் சஞ்சீவி மெதுவாகக் கேட்டார்.

"ஒரு ஐந்து நிமிடத்துக்கு முன்."

"இரவு பூராவும் சரியான தூக்கம் இருந்தால் போதும், காலையில் சற்று வலிவு இருக்கும்."

"காயம் பலமானதா?"

"பலமானதுதான். விலாவெலும்பும், கை முன்னெலும்பும் ஒடிந்திருந்தன. ஆனால் கடுமையான ஆபத்து ஒன்றும் இருக்காது. அதற்காக அசட்டையாக இருந்துவிடக்கூடாது."

கமலநாதனுல் அங்கு நின்றுகொண்டிருக்க முடியவில்லை. தங்கத்தின் சோர்ந்த முகத்தைப் பார்க்கும்பொழுது அவனுக்குப் பரிதாபம் ஏற்பட்டது. மறுகணம் " குற்றவாளி !" என்று ஆத்திரம் வந்தது. கமலநாதன் வெளியில் வந்துவிட்டான்.

டாக்டர் சஞ்சீவி திரும்பிப்பார்க்கும்பொழுது கமலநாதன் காணப்படவில்லை. டாக்டர் சஞ்சீவி மெதுவாக இறங்கிவந்து, கீழே இருந்த மரத்தடியில் இருந்த பலகையில் உட்கார்ந்திருந்தார். அந்த வழியே போன பலர் அவருக்கு வணக்கந் தெரிவித்தனர். கையை அசைத்து அவர்களை அனுப்பினுரேயொழிய, அவர் மனம் சுற்றிலும் நடப்பதை அறியாதிருந்தது.

மாலையின் தாழ்ந்த வெய்யல் மறைந்து, இரவின் வருகை ஆரம்பித்தது, ஆஸ்பத்திரியின் உள்ளிருந்து, விளக்கு வெளிச்சம் வெளியில் வீசத்தொடங்கியது. அமைதியில், இருளில் ஆழ்ந்து, டாக்டர் சஞ்சீவி உட்கார்ந்திருந்தார்.

" டாக்டர்! தங்கம் எங்கிருக்கிருள் ?" என்ற குரல் அவரை எழுப்பியது. குலசேகரனும், சகுந்தலாவும் எதிரில் நின்றனர்.

தங்கத்திற்கு ஏற்பட்ட விபத்தில், சகுந்தலா வருவாள் என்பதை டாக்டர் சஞ்சீவி முற்றிலும் மறந்துவிட்டார். அவள் எதிரில் நின்றதும் அவர் திகைப்புடன் ஆச்சரியத்துடன், அவளைப் பார்த்தார்.

" தங்கம் எங்கிருக்கிருள் ? ஏதோ கார் விபத்தில் சிக்கி, இங்கு இருப்பதாகச் சொன்னுர்களே !" குலசேகரன் மீண்டும் கேட்டான்.

" அதோ !' விளக்குத் தெரிகிறதே அந்த அறையில்தான் இருக்கிருள் ! தூக்கத்தில் இருக்கிறபடியால், சத்தம் செய்யாமல் பார்த்துவிட்டு வாருங்கள்."

குலசேகரனும். சகுந்தலாவும் பிற்பகல் மூன்றுமணிக்கு தங்கம் குறிப்பிட்டபடி தோட்டத்துக்கு வந்தனர். ஆனுல் அங்கு தங்கத்தைக் காணும். காலையில் வந்துவிடுவதாகக் கூறியிருந்தும், அந்நேரம்வரை அவள் வராதது குலசேகரனுக்கு ஆச்சரியமாக இருந்தது. முதல்நாள் பார்த்தபொழுது, காலையில் வருவதாக டாக்டர் தங்கம் சொன்னுர்களென்று தோட்டக்காரன் சொன்னுன். தங்கத்தின் வருகைக்காக அவர்கள் நெடுநேரம் காத்திருந்தனர். ஐந்து மணிவரையில் தங்கம் வரவில்லை. அதன்பின் குலசேகரனும் சகுந்தலாவும் புறப்பட்டு, தங்கத்தின் வீட்டிற்கு வந்தார்கள். அங்குதான் தங்கம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட செய்தி தெரிந்தது.

குலசேகரனும் சகுந்தலாவும் கீழே இறங்கி வந்தபொழுதும், டாக்டர் சஞ்சீவி முன்பிருந்த நிலையில் அசையாதிருந்தார். குலசேகரனும் பேசமுடியாத நிலையில் அருகில் உட்கார்ந்தான். சகுந்தலா அழுதுகொண்டிருந்தாள்.

" எப்படி இந்த விபத்து நேர்ந்ததாம் ?" என்று குலசேகரன் கேட்டான்.

" சரிவரத் தெரியவில்லை. சரிவான பாதையோரத்தில், கார் கவிழ்ந்து விழுவதைத் தூரத்தில் வந்துகொண்டிருந்த லாரியில் இருந்தவர்கள் பார்த்தனராம். பாதை மேடும் பள்ளமாகவும், வளைந்து வளைந்தும் இருந்ததால், அவர்கள் வருவதற்கு சிறிது நேரமாயிற்று. கீழே இறங்கி, அடிபட்டு, மூர்ச்சையாகிக்கிடந்த தங்கத்தை லாரியில் போட்டு, ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தனர். அந்தப் பாதையில் ஏன் தங்கம் போனுளென்று எனக்குப் புரியவில்லை. மிகச் சரிவான பாதை!"

" தோட்டத்தில் வந்து காத்துக்கொண்டிருப்பதாகச் சொன்னதின்பேரில் நாங்கள் அங்கு சென்றோம். தங்கத்தின் கார் சென்ற வழி, நேரான பாதையிலிருந்து வெகுதூரம் தள்ளியிருந்தது. தனியாக, முன்பின் தெரியாத அந்தப் பாதையில் ஏன் சென்ருள் ?"

மறுநாள் காலை, கமலநாதன் ஆஸ்பத்திரிக்கு வந்தபொழுது—இரவு பூராவும் அவன் தூங்கவில்லையென்பது அவன் முகத்தைப் பார்த்தாலே தெரிந்தது—டாக்டர் சஞ்சீவி அவனை அதே கேள்வியைத்தான் கேட்டார். " தனியாக, முன்பின் தெரியாத அந்தப் பாதையில் தங்கம் ஏன் தனியாகச் சென்ருள் ?"

கமலநாதன் பதிலெதுவும் சொல்லாமல் நின்ருன்.

" தங்கத்தால் சரியாகக் கார் ஓட்டமுடியாதென்பதை ஒருமாதத்துக்கு முன்பே உனக்கு நான் சொன்னேன். கடற்கரையில், அவள்

வேகமாக ஓட்டிச்சென்று. விளக்குக் கம்பத்தில் மோதியதிலிருந்து, அவள் கார் ஓட்டக்கூடா தென்று எச்சரித்திருந்தேன். அன்றே பெரிய ஆபத்து வந்திருக்கவேண்டும், தப்பினோம். அதேவிதத்தில் இந்த விபத்தும் நிகழ்ந்திருக்க வேண்டும்.''

டாக்டர் சஞ்சீவியும், கமலநாதனும் உள் நுழைந்தபொழுது தங்கம் படுக்கையில் சாய்ந் திருந்தாள், பலவீனத்தால் அவள் முகம் சோர்வடைந்து, கண்கள் ஒளியிழந்திருந்தன. டாக்டர் சஞ்சீவியும், கமலநாதனும் உள் நுழைவதைப் பார்த்ததும், அவளையறியாமல் திடுக்கிட்டு, எழுந்து உட்கார முயன்றாள். உதடுகள் துடித்தன,. கண்கள் கடுமையான பார்வையடைந்தன, முகம் சிவந்துவிட்டது. மறுகணம் வலி தாங்காமல் சாய்ந்துவிட்டாள்.

"பேசாமல் படுத்திரு?'' என்று டாக்டர் சஞ்சீவி அருகில் உட்கார்ந்து, அவள் கையைப் பிடித்துப் பார்த்தார். "எப்படியிருக் கிறது? இரவு நன்றாகத் தூங்கினார்களா?'' என்று நர்சை அவர் கேட்டார்.

"தூங்கினார்கள். ஆனால் காலையில் சீக்கிரம் எழுந்துவிட்டார்கள்.''

"காலையில் என்ன கொடுக்கப்பட்டது?''

"பழச்சாறு மட்டும்.''

டாக்டர்கள் ஒவ்வொருவராக வந்து எப்படி யிருக்கிறது என்று கேட்டனர். கூட்டம் அதிகமானது. கமலநாதன் ஒதுங்கி, மூலையில் நின்றுகொண்டிருந்தான், அவன் மனம் எங்கோ அலைந்துகொண்டிருந்தது.

கூட்டம் குறைந்து, இரண்டு மூன்று டாக் டர்கள் மட்டும் இருந்தனர். அப்பொழுதும் கமலநாதன் தனது மூலையைவிட்டு, நகர வில்லை. அவனது பார்வை வெளியில் அசைந்துகொண்டிருந்த ஒரு மரத்தின் உச்சி மீது படிந்திருந்தது.

குலசேகரனும், சகுந்தலாவும் வந்தார்கள் சகுந்தலாவைப் பார்த்ததும், முதல் தடவை யாக தங்கத்தின் முகத்தில் புன்னகை அரும் பியது.

கமலநாதனைப் பார்த்ததும், குலசேகரன் அவனிடம் வந்து, "கார்விபத்து என்று நேற்று சொன்னதும், என்னால் நம்பவே முடியவில்லை. அந்தப் பாதையில் அவள் ஏன் போனாள்?'' என்று கேட்டான். கமலநாதன் அவனை முறைத்துப் பார்த்துவிட்டு, ஒன்றும் பதில் கொடுக்காமல் வெளியேறினான்.

நாள்தோறும் காலையிலும், மாலையிலும் கமல நாதன், ஆஸ்பத்திரிக்கு வருவான், டாக்டர் சஞ்சீவியை அழைத்துக்கொண்டு தங்கம் இருக்கும் அறைக்குள் வந்ததும், மெதுவாகப் படுக்கைக்குப் பின்புறமாக ஒதுங்கிப்போய் நின்றுகொள்வான். மற்றவர்கள் பேசுவார்கள், விசாரிப்பார்கள், கமலநாதன் வாய்திறப்ப தில்லை. சிறிதுநேரம் நின்றுகொண்டிருந்த தும், அவன் வெளியேறிவிடுவான். தங்கத் தின் பார்வையை அவன் சந்திக்க மறுத் தான். குலசேகரனைப் பார்க்கும்பொழுது மட்டும், அவன் முகம் மாறுதலடையும். தன் னுடைய நிலை, தங்கத்தின் நிலை, எல்லாவற் றுக்கும் குலசேகரன்தான் அடிப்படையான காரணம் என்பது கமலநாதனின் முடிவான எண்ணம். ஒருவாரத்துக்குப் பிறகு, தங்கத் தின் உடல்நிலை சற்று வலிவடைந்ததும், விபத்து நேர்ந்த விபரத்தை போலிஸ் போக்கு வரத்துப்பிரிவினர் கேட்டனர். அதில் தான் தனியாக ஓட்டிச்செல்லும்பொழுது, பாதையை விட்டு விலகி, கார் கவிழ்ந்து விழுந்ததாகச் சொன்னாள். அது எதிர்பாராத விபத்தாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இரவு நேரத்தில், விளக்குகள் அணைந்து தனிமையாக இருக்கும்பொழுது, "அவர் ஏன் அப்படிச் செய்தார்?'' என்று தங்கம் தனக்குள்ளாகவேக் கேட்டுக்கொள்வாள். உறக்கம் பிடிக்கும்வரை, அந்தக் கேள்வி அவள் மனதில் உழன்றுகொண்டிருக்கும். காலையில் கண்விழித்ததும், முதலில் அந்தக் கேள்விதான் அவள் நினைவில் நிற்கும். காலை மாலையாகும், மாலைக்குப்பின் இரவு வரும்— இருள், தனிமை—இரவு விடுபட்டு காலை மல ரும், ஆனால் அவளுடைய கேள்வி விடுபடாத இருளாக இருந்தது.

(தொடரும்)

வினாவும் விளக்கமும்

வினா : திருக்கோவில்கள், தேவார திருவாசகம் முதலியன பார்ப்பனக் குலத்துக்கு அரண் செய்கின்றன என்று கருதுகிறீர்களா? அப்படி அரண் செய்வதனால் அவையெல்லாம் வேண்டாம் என்கிறீர்களா? இக்கருத்துக்குத் தக்க ஆதாரங்கள் எடுத்துக் காட்ட முடியுமா?

விளக்கம் : பார்ப்பனக் குலத்துக்கு உயர்வு கற்பித்தும், தனி உரிமைகள் வழங்கியும், அவர்கள் உடலுழைப்பில்லாத வாழ்வு வாழ வசதிகள் பலவும் செய்துகொடுத்தும் வருவன, திருக்கோயில்கள், தேவார திருவாசகம் ஆகியவைபோன்றவையே யாகும் என்று கூறினால் அதில் சிறிதும் ஐயப்பாடில்லை. அவை பார்ப்பனக் குலத்துக்கு அரண் செய்கின்றன என்று நாம் உறுதியாகச் சொல்லத்தான் செய்கிறோம்; அப்படியே உளமாரக் கருதுகிறோம்.

திருக்கோயில்களும், தேவார திருவாசகமும் அறவே வேண்டாம் என்று நாம் சொல்லவில்லை. திருக்கோயில்கள் கண்காட்சிச்சாலைகளாகவும், பொருட்காட்சிச்சாலைகளாகவும், கலைபயில் இடங்களாகவும், பள்ளிக்கூடங்களாகவும், தொழிலகங்களாகவும், பொழுதுபோக்கு இடங்களாகவும், பொது அரங்கங்களாகவும் பயன்படட்டும் என்றுதான் சொல்லி வருகிறோம்; தேவார திருவாசகம் முதலியன 'முக்தி' தரும் நூல்களாக மூடத்தனமாகக் கருதப்படாமல், பொழுதுபோக்கு இன்னிசைப் பாடல்கள் பாடி மகிழ்வதற்குப் பயன்படும் நூல்களாக இருக்கட்டும் என்றுதான் சொல்லிவருகிறோம்.

திருக்கோயில்கள் - தேவார திருவாசகம் ஆகியவற்றிடத்தில், 'அருள்நெறித் திருக்கூட்டத்தார்' காட்டும் அளவுக்கு நம்பிக்கையையும், மதிப்பையும் உறுதியாக நாம் காட்ட முற்படுவதில்லை. அப்படிக் காட்ட முற்படாததற்கு அவையெல்லாம் பார்ப்பனக் குலத்துக்கு அரண் செய்கின்றன என்பதுமட்டுமல்ல காரணம், வேறு பல காரணங்களும் உண்டு. எண்ணிறந்த குருட்டு நம்பிக்கைகளையும், மூடப்பழக்க வழக்கங்களையும், தேவைப்படாத 'பக்தி'யையும் வளர்ப்பதற்கு அவையெல்லாம் காரணமாக இருப்பதால்தான், அந்தவகையில் அவற்றைப் புறக்கணிக்க முற்படுகிறோம்.

திருக்கோயில்கள்—தேவார திருவாசகம் ஆகியவை பார்ப்பனக் குலத்துக்கு அரண் செய்கின்றன என்பதற்கு என்ன ஆதாரங்கள் காட்டமுடியும் என்று கேட்டால், பலப்பல காட்டமுடியும் என்றுதான் விடையிறுக்கிறோம்.

திருக்கோயில்களிலுள்ள கடவுட்சிலைகளைப் பார்ப்பனக் குலத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே தொடலாம் என்பதும், திருக்கோயில் சமையல்களைப் பார்ப்பனர்கள் மட்டுமே சமைக்கவேண்டும் என்பதும், மடப்பள்ளியிலும் கர்ப்பக்கிரகத்திலும் பார்ப்பனர்கள் மட்டுமே செல்லலாம் என்பதும், பார்ப்பனரின் வடமொழி மந்திரங்களும்—தோத்திரங்களும் மட்டுமே கர்ப்பக்கிரகத்தில் சொல்லப்படவேண்டும் என்பதும், ஆண்டவனுக்குப் பதிலாக, அம்மைக்குத், திருக்கல்யாண காலத்தில், தாலிகட்டும் பொறுப்பைப் பார்ப்பது குருக்கள் மட்டுமே கொண்டிருக்கவேண்டும் என்பதும், ஆண்டவனின் சார்பாகத் தேவடியாள்களுக்குத் தாலிகட்டும் வேலையைப் பார்ப்பனக் குருக்கள் மட்டுமே செய்யவேண்டும் என்பதும், ஆண்டவனுக்குப் 'பக்தர்கள்' அளிக்கும் தேங்காய் — பழம்—படையல்—ஆடை—அபிடேகம்—பணம் போன்ற காணிக்கைகளிலே தாராளமான பங்கைப் பார்ப்பனக் குருக்கள் பெற்றுக்கொள்வது என்பதும், பார்ப்பனக் குருக்கள் கொடுக்கும் 'விபூதி பிரசாதம்' முதலியவற்றை மற்றவர்கள் தலைதாழ்த்திக் கைதாழ்த்திப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும், கோயில் நிலங்களைப் பார்ப்பனக் குருக்கள் மான்யமாகப் பெறுவது என்பதும், கோயில் வேதபாடசாலைகளில் பார்ப்பனர்கள் மட்டுமே பயிலவேண்டும் என்பதும், ஆகிய இவைபோன்றவையெல்லாம், திருக்கோயில்கள் பார்ப்பனக் குலத்துக்கு

எப்படி அரண்செய்வதாக அமைந்திருக்கின்றன என்பதைக் காட்டுவனவாகும்.

பார்ப்பனக் குலத்தை மிக உயர்ந்த குலமாகப் பேசுவதும், தேவலோகத்திலுள்ள சுரர்களோடு வைத்து எண்ணவேண்டிய பூசுரர்கள் என்று பார்ப்பனரைப் புகழ்வதும், ஆண்டவர்களும் பார்ப்பனர்களும் ஒன்றாக மதிக்கப்படவேண்டியவர்கள் என்னும் கருத்துப்படப் பார்ப்பனரின் முப்புரிநூல் போற்றுவதும், மற்ற எல்லாக் குலத்தாரையும் விட்டுவிட்டு "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்று பார்ப்பனர்களை மட்டும் வாழ்த்துவதும், பெரும்பாலும் பார்ப்பனக் கோலத்திலேயே ஆண்டவன் வந்தார் என்று கூறுவதும் ஆன செயல்களைத் தேவார திருவாசகங்கள் முழுக்க முழுக்கச் செய்திருக்கின்றன. இவையெல்லாம் பார்ப்பனக் குலத்துக்கு அரண்செய்வனவாகும் என்பதை எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம்.

திருக்கோயில்கள்—தேவார திருவாசகங்கள் ஆகியவை புறக்கணிக்கப்படுவதற்குள்ள பல்வேறு காரணங்களில், அவையெல்லாம் பார்ப்பனக்குலத்துக்கு அரண்செய்கின்றன என்பதும் ஒன்றாகும் என்பதை அருள்நெறித் திருக்கூட்டத்தார் உணர்வார்களாக!

❖ ❖ ❖

வினா : கழகம் நடத்திய கல்லக்குடிப் போராட்டம் நிறுத்தப்பட்டது ஏன்? அரசினர் கல்லக்குடியாக மாற்றி அமைக்கிறோம் என அறிவித்ததுண்டா?

விளக்கம் : "வடநாட்டு அரசியல் ஆதிக்கம்—வடநாட்டு முதலாளித்துவ ஆதிக்கம்—வடநாட்டு இந்தி ஏகாதிபத்ய ஆதிக்கம் ஆகியவை திராவிடத்தை ஆட்டிப்படைத்து அலக்கழிக்கின்றன; அந்த ஆதிக்கங்கள் அகற்றப்படவேண்டும்; திராவிடம் விடுதலைபெறவேண்டும்" என்ற கருத்தைத் திராவிடப் பெருங்குடி மக்களுக்கும், வடநாட்டு ஆதிக்கக்காரர்களுக்கும், வெளியுலக மக்களுக்கும், சென்னை அரசியலார்க்கும், இந்தியப் பேரரசினர்க்கும் விளக்கிக்காட்டும் அறிகுறியாகவே, 'டால்மியாபுரத்'தைக் 'கல்லக்குடி'யாக மாற்றவேண்டும் என்ற போராட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கியது, வடநாட்டு அரசியல்—முதலாளித்துவம்—மொழி ஆகிய மூன்று ஆதிக்கங்களின் இருப்பிடமாக 'டால்மியாபுரம்' விளங்குவதால்தான், அதனைத் தி. மு. கழகம் எடுத்துக்காட்டாகக் கொண்டது; அந்த முக்கூட்டு ஆதிக்கங்களை எதிர்க்கிறோம் என்பதன் அறிகுறியாகத்தான் 'டால்மியாபுரத்'தைக் 'கல்லக்குடி'யாக மாற்றும் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

'டால்மியாபுரத்'தைக் 'கல்லக்குடி'யாக மாற்றவேண்டும் என்று தி. மு. கழகம் அரசியலாரை வற்புறுத்திற்று தீர்மானத்தின் மூலம். அரசியலார் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மாற்றாவிட்டால், தானே மாற்றிக் காண்பிக்கப்போவதாகத் தி. மு. கழகம் அறிவித்தது. அரசியலார் அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் மாற்றாததால், தி. மு. கழகமே 'கல்லக்குடி' என்று அச்சடிக்கப்பட்ட தாள்களை 'டால்மியாபுரம்' என்று பெயர் எழுதப்பட்டிருந்த புகைவண்டி நிலையப் பெயர்ப்பலகைகளில் ஒட்டியது. பிறகு கல்லக்குடி என்றே புகைவண்டி நிலையம் நீண்ட நாட்களுக்குக் காட்சியளித்தது. அரசாங்கம் வைத்துள்ள பெயர்ப்பலகையிலுள்ள பெயரை அழித்துவிட்டு வேறு பெயரை ஒட்டுவது என்பது சட்டப்படி தவறாகும். அப்படியிருந்தும் அரசாங்கம் நடவடிக்கை ஏதும் எடுக்காமல் 'டால்மியாபுரத்'தைக் 'கல்லக்குடி' என்று மாற்றுவதை அனுமதிக்கவே செய்தது; தடை ஏதும் செய்யவில்லை. "அரசாங்கம் 'டால்மியாபுரம்' என்ற பெயரை மாற்றிக் 'கல்லக்குடி' என்று அமைக்காவிட்டால், நாமே 'கல்லக்குடி' என்று அச்சடிக்கப்பட்ட தாளை ஒட்டுவோம்" என்று தி. மு. கழகத்தவர், தாம் எடுத்த தீர்மானத்திற்கிணங்க ஒட்டிக் காண்பித்தார்கள். அந்த வகையில் தி. மு. கழகம் வெற்றிபெறவே செய்தது.

வடநாட்டு முக்கூட்டு ஆதிக்கங்களினின்றும் திராவிடம் விடுபடவேண்டும் என்ற உணர்ச்சியைத் திராவிடர்க்கு ஊட்டவும், அந்தக் கோரிக்கையை வடநாட்டவர்க்குத் தெரியப்படுத்தவும் மேற்கொள்ளப்பட்ட அறிகுறிப் போராட்டமே 'கல்லக்குடிப் போராட்டம்' ஆகும். அந்த அறிகுறிப் போராட்டத்தை ஆண்டுக்கு ஒருமுறை ஜூலைத் திங்கள் 15-ஆம் நாள் நடத்திக்காட்டிக்கொண்டிருக்கிறோம்; கோரிக்கை வெற்றிபெறுங் காலம் வரையிலும் இந்த முறையில் அறிகுறிப் போராட்டம் நடந்துகொண்டே இருக்கும். வெற்றி, திராவிடம் விடுதலை பெறுவதற்கு முன்னால் கிட்டினாலும் கிட்டக்கூடும் அல்லது, திராவிடத்தின் விடுதலையோடு சேர்ந்து கிட்டினாலும் கிட்டக்கூடும். எனவே கல்லக்குடிப் போராட்டம் நிறுத்தப்படவில்லை, ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்பட்டு, திராவிட விடுதலை

உணர்ச்சி பரப்பப்பட்டுவருகிறது என்பதை யாவரும் உணரவேண்டும்.

டால்மியாபுரத்தைக் 'கல்லக்குடி' என்று மாற்றியமைக்க இந்திய அரசாங்க இரயில்வே இலாகா முடிவு எடுத்ததாகவும், அப்படி மாற்றியமைக்கப்படும் செய்தி கிடைத்ததால் தான் "இந்து", "மெயில்", "சுதேசமித்திரன்" போன்ற நாளிதழ்கள் அதனை வெளியிட்டதாகவும், பிறகு கோயங்கா போன்ற வடநாட்டு வணிகக்கோமான்களின் விடாப்பிடிவாதமான வற்புறுத்தலின்பேரில் பெயர் மாற்றுவது நிறுத்தப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றன.

❖ ❖ ❖

வினா : சினிமா எழுதி நாட்டைப் பிரிந்தவர்கள் உண்டா?

விளக்கம் : வெறும் குத்தூசி பிடித்துப பல சரக்கு மூட்டைகளைக் குத்தி நாட்டைப் பிரித்தவர்கள் உண்டா என்று எவரேனும் வினவினால், அந்த வினாவில் எவ்வளவு அறியாமை நிரம்பியிருக்கிறது என்று கருதுவோமோ அவ்வளவு அறியாமை இந்த வினா எழுப்புவோரிடத்திலும் நிரம்பியிருக்கிறது என்றுதான் கருதவேண்டும்.

வெறும் சினிமா எழுதிமட்டுமே நாட்டைப் பிரித்துவிடலாம் என்று எவரும், எங்கும், எப்பொழுதும் கூறியதுமில்லை—எண்ணியதுமில்லை. பிறர் எண்ணாததைப் பிறர் எண்ணியதாக நினைத்துக்கொண்டு ஏதேதோ சிலர் புலம்புகிறார்களே என்றால், அவர்கள் மனக் குழப்பம் அடைந்தவர்கள், மிக மட்டமாகக் கருதப்படவேண்டியவர்கள் என்று அவர்களை ஒதுக்கிவைக்கவேண்டியதைத் தவிர, அவர்களைத் திருத்தும் வழி ஏதும் இல்லை.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சினிமாக் கதை—வசனம் எழுதுகிறார்களே என்பதை மனதில் வைத்துக்கொண்டு, அவர்களுக்கு அமைந்துள்ள அறிவும் ஆற்றலும் கிடைத்துள்ள பெயரும் புகழும் தமக்குக் கிடைக்கவில்லையே என்ற பொறாமையால் உளம் புழுங்கி நைந்துபோகும் சில வேற்றுக் கட்சிக்காரர்கள், மேற்கண்ட வினாவை அடிக்கடி எழுப்பி, மன அமைதிபெற முயலுகிறார்கள். திராவிடநாட்டுப் பிரிவினையில் நாட்டங்கொண்ட திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சார்ந்த எல்லோருமா சினிமாக் கதை—வசனம் எழுதுகிறார்கள்? என்றால், விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு ஐந்துபேர்தான் எழுதுகிறார்கள்! திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தோர் சினிமாக் கதை—வசனம் எழுதுவதைக் குறைகூறும் வேற்றுக்கட்சிக்காரர்கள், சினிமாவையும் அதற்குக் கதை—வசனம் எழுதுவதையும் அறவே வெறுத்தவர்களா? என்றால், அதுதான் இல்லை! அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்களும், சினிமாக் கதை—வசனம் எழுதுகிறார்கள், சினிமாவில் நடிக்கிறார்கள், அவர்கள் கட்சிச் செய்தித்தாளில் சினிமாவை விளம்பரமும் செய்கிறார்கள். பின் என் தி. மு. கழகத்தாரை மட்டும் அவர்கள் குறை சொல்லுகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் பொறாமை! பொறாமை!! பொறாமை!!!

தி. மு. கழகத்தவர்கள், சினிமா எழுதினால்தான் நாட்டைப் பிரிக்க முடியும் என்று எங்கும் கூறியதில்லை; கட்சிக் கருத்துக்களைப் பரப்ப செய்தித்தாள்களையும், கருத்திதழ்களையும், நூல்களையும், பேச்சு மேடைகளையும், இசையரங்குகளையும், நாடக மன்றங்களையும் பயன்படுத்த முனைவதுபோல், சினிமாக் கதை—வசனம் எழுதும் ஆற்றல் பெற்றவர்கள் இயன்ற அளவுக்குச் சினிமாவையும் பயன்படுத்த முனைகிறார்கள். அவ்வளவுதான்! கட்சிக் கருத்துக்களை இயன்ற அளவுக்குப் பரப்ப, சினிமா, ஒரு வாய்ப்பான கருவி; மற்ற கருவிகளைக்காட்டிலும் விரிவான முறையில் பரப்ப ஏற்ற எளிய கருவி. எனவேதான் சினிமாவை, ஆற்றலுடையோர், கட்சிக் கருத்துக்களைப் பரப்ப துணைக்கழைத்துக்கொள்கிறார்கள்.

சினிமாத்துறையில் ஈடுபட்டிருக்கும் தி. மு. கழகத்தவர்களைக் குறைகூறும் வேற்றுக்கட்சிக்காரர்கள், எந்த அளவுக்குப் பொதுப்பணி செய்கிறார்களோ, அந்த அளவுக்குமேல்தான் தி. மு. கழகத்தவர்கள் பொதுப்பணி செய்கிறார்களே ஒழிய குறைவாகச் செய்யவில்லையே! குறைகூறும் குணாளரிலே முக்கியமானவரை எடுத்துக்கொண்டால், அவர் தம் கட்சிக் கருத்துக்களைப் பரப்ப எவ்வளவு எழுதுகிறாரோ, எவ்வளவு பேசுகிறாரோ (இந்த இரண்டைத்தவிர வேறு கட்சிப்பணி ஏதும் செய்ததில்லை—செய்யத் தெரிந்ததில்லை) அதைவிட மிகவாகத்தான் எழுதுகிறார்கள்-பேசுகிறார்கள், சினிமாத்துறையில் ஈடுபட்டிருக்கும் தி. மு. கழகத்தவர்கள். அந்தக் குணாளர் சுற்றுப்பயணம் செய்வதைவிட மிகவாகத்தான், மற்றவர்கள் சுற்றுப்பயணம் செய்கிறார்கள். அந்தக் குணாளர் எதைப் பொதுத்தொண்டு என்று கருதிக்கொண்டிருக்கிறாரோ, அந்தப் பொதுத் தொண்டை, அவர் செய்யும் அளவுக்குமேல்

மற்றவர்களும் செய்கிருர்கள். அவர், எழுதுவது—பேசுவது என்ற கட்சித் தொண்டுக்குச் செலவிட்ட நேரம்போக, மீதி நேரத்தை எதற்குச் செலவிடுகிருர் என்பது பொதுமக்களுக்குத் தெரிவதில்லை; ஆனல் மற்றவர்கள் அவர் செய்யும் தொண்டுக்குமேல் தாமும் செய்து, மீதி நேரத்தில்தான் சினிமாக் கதை—வசனம் எழுதுதல், நாடகம் நடித்தல், புயல் நிவாரணநிதி திரட்டுதல், கைத்தறியாடை விற்றல், போராட்டங்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடுதல், சிறை புகுதல் போன்ற செயல்களில் ஈடுபட்டுவந்தனர்—ஈடுபட்டு வருகின்றனர்.

தி. மு. கழகத்தைச் சார்ந்தோர் கட்சித் தொண்டுகளை அறவே புறக்கணித்துவிட்டுச் சினிமாத்துறையில் ஈடுபடவில்லை; குறை கூறுவோர் செய்யும் தொண்டுக்குமேல் பொதுத்தொண்டு செய்துவிட்டுத்தான், சினிமாத்துறையில் ஈடுபட்டு அதன்மூலமும் தொண்டுசெய்ய முயலுகிருர்கள் என்பதைத் தி. மு. கழகத்தவரை நினைத்துக்கொண்டு மேற்கண்ட அறியாமை நிரம்பிய வினவை எழுப்புவோர் உணர்தல் வேண்டும்.

❖ ❖ ❖

வினு : **திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், திராவிட மாணவ முன்னேற்றக்கழகத்துக்கும் உள்ள ஒற்றுமை—வேற்றுமை என்ன ?**

விளக்கம் : திராவிட முன்னேற்றக் கழகம் என்ன கொள்கைகள்—கோட்பாடுகள்—நோக்கங்கள்—திட்டங்கள் ஆகியவற்றை வகுத்துக்கொண்டிருக்கிறதோ, அவற்றை அப்படியே தழுவி நிற்பதுதான் திராவிட மாணவ முன்னேற்றக்கழகம்.

தி. மு. கழகம் எத்தகைய அமைப்புமுறையைக் கொண்டிருக்கிறதோ அதே மாதிரியான அமைப்புமுறையைத்தான் தி. மா. மு. கழகமும் கொண்டிருக்கும்.

இரண்டு கழகங்களும் தமக்குள் ஒன்றிற்கு ஒன்று தேவையான உதவிகளைச் செய்துகொள்ளும். கருத்துப் பரப்புதலில் இரண்டு கழகங்களும் இணைந்து நின்றும் தனித்தனியே பிரிந்திருந்தும் பணிபுரியும். தி. மு. கழகப் பேச்சாளர்கள் தி. மா. மு. கழக மேடைகளில் தோன்றுவர். அதுபோலவே தி. மா. மு. கழகப் பேச்சாளர்கள் தி. மு. கழக மேடையில் தோன்றுவர்.

தி. மு. கழகத்திற்கும் தி. மா. மு. கழகத்திற்கும் உள்ள வேற்றுமை என்னவென்ருல், தி. மு. கழகம் நேரடி அரசியல் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கும்; ஆனல் தி. மா. மு. கழகம் நேரடி அரசியல் நடவடிக்கைகளில் இறங்காமல், மாணவர்களின் படிப்பு பாழாகாத வகையில், அரசியலை அறிந்துகொள்வதிலும், அரசியல் கருத்துக்களைப் பரப்புவதிலும் ஈடுபடும்.

தி. மு. கழகத்தில் மாணவரல்லாதவர்கள் உறுப்பினராவர்; தி. மா. மு. கழகத்தில் மாணவர்கள் மட்டுமே உறுப்பினராவர்.

மாணவர்களுக்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிக் குறிப்பிடும்போது மூன்றுவிதக் கருத்துக்களைப் பொதுவாக வெளியிடுகின்றனர். (1) மாணவர்கள் அரசியலில் அறவே கவனம்செலுத்தக்கூடாது; (2) மாணவர்கள் அரசியலில் முழுக்க முழுக்கப் பங்குகொள்ளத்தான் வேண்டும்; (3) மாணவர்கள் அரசியலைப்பற்றி அறிந்துகொள்ளத்தான் வேண்டும், ஆனல் நேரடி அரசியல் நடவடிக்கைகளில் இறங்கக்கூடாது என்ற மூன்றுவிதக் கருத்துக்களை வெளியிடுகின்றனர். தி. மு. கழகம் இந்த மூன்று கருத்துக்களில் மூன்ருவது விதக் கருத்தைத்தான் ஆதரித்து வருகிறது.

மாணவர்கள் அரசியலில் அறவே கவனம் செலுத்தக்கூடாது என்ருல், மாணவர்கள் படிப்புக்காலம் முடிந்து பொதுவாழ்க்கையில் இறங்கும்போது, வளர்ந்திருக்கும் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ருற்போல் தங்களைப் பக்குவப்படுத்திக்கொள்ளமுடியாத திறமையற்றவர்களாகவே காட்சியளிப்பர். மாணவர்கள் முழுக்க முழுக்க அரசியலில் பங்குகொள்ளத்தான் வேண்டும் என்ருல், பல மாணவர்களின் படிப்பு பாதியிலே கெட்டு வாழ்வு பாழாகிவிட நேரிடும்; நாடு திறமையுள்ளவர்களைப் பெற முடியாமற் போய்விடும். இத்தகைய கேடுகள் ஏற்படக்கூடாது என்று கருதிதான் தி. மு. கழகம், மாணவர்கள் அரசியலை அறிந்துகொள்ளத்தான் வேண்டும் ஆனல் நேரடி அரசியல் நடவடிக்கைகளில் இறங்கக்கூடாது என்று சொல்லிவருகிறது.

சுருக்கமாகக் கூறினல், மாணவர்கள் பள்ளிகள் கல்லூரிகள் ஆகியவற்றிலே அறிவியல் துறை, கலையியல்துறைபற்றிய பயிற்சியைப் பெறுகிருர்கள்; தி. மா. மு. கழகத்தின் மூலம் அரசியல் பயிற்சியைப் பெறுகிருர்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

"மன்றம்"

மலர் - 3 1954 - 55

24 இதழ்கள் கொண்ட பைண்ட் செய்யப்பட்ட மலர் ஒன்று

விலை ரூ. 8-0-0

(தபாற்செலவு உட்பட)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.
வி. பி. கிடையாது.
(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 10 வீதம் அனுப்பவேண்டும்.)

விபரங்கட்கு :

"மன்றம்"
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

வெளிவந்துவிட்டது !

திராவிடர் நாட்குறிப்பு 1956

இதில்

தி. மு. க. முழு விவரங்கள், சட்ட திட்டங்கள், பேச்சாளர்களின் முகவரிகள், அஞ்சல் பத்திரப்பதிவு கட்டணங்கள், விற்பனை வரி வருமான வரி விவரங்கள் உள்ளன.

உலக அறிஞர்களின் புதிய பொன்மொழிகள் பக்கத்துக்குப் பக்கம்

அழகிய முழு கலிகோ பைண்டு 500 பக்கம்

விலை ரூ. 1—0—0

செலவு தனி விற்பனையாளர் கழிவு 20%.

ஒரு டயரி வேண்டுவோர் ரூ. 1-3-0 அனுப்புக.

பலவகையான தி. மு. க. தலைவர் படங்கள், பொங்கல் வாழ்த்துக்கள் கிடைக்கும்.

போர்வாள் அலுவலகம்,
பவழக்காரத் தெரு, சென்னை-1.

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி! டெலிபோன் நெ. 22

அவ்வை புத்தக நிலையம்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார். (மலாயா)

எங்களிடம்!

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர்களின் கருத்தோவியங்களும் அறிவூட்டும் நாவல்களும் துப்பறியும் கதைகளும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், (சினிமா) கதை வசனபாட்டு புத்தகங்களும், கலர் படங்களும், தாயகத்திலிருந்து வரும் வார, மாத பத்திரிகைகளும், ஸ்டேசனரி சாமான்களும், காலண்டர், மற்றும் ஆங்கில காமிக்ஸ், மேக்கிசன் & நாவல்களும் மலாய் நாவல்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

குறிப்பு: வியாபாரிகளுக்கு தக்க கழிவு உண்டு.

வெளியூர் ஆர்டர்களை தாமதமின்றி கவனிக்கப்படும். உடன் தொடர்பு கொள்க.

AVVAI BOOK STORE

142, JALAN IDRIS, KAMPAR. Tel. No. 22. PERAK, MALAYA.

கிளை நிலையம்: அவ்வை புத்தக நிலையம், 9, புரூஸ்ட்டர் ரோடு, ஈப்போ.

AVVAI BOOK STORE, 9, Brewster Road, IPHO. Tel. No. 4756.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.